கம்பன் தந்த கமலங்கள்

கவிச்செம்மல் ரெ.மு.

கம்பன் தந்த கமலங்கள்

(கட்டுரைகள்)

ஆசிரியர்
கவிச்செம்மல் டாக்டர்
ரெ. முத்துக்கணேசன்

விற்பனை உரிமை

செல்வி பதிப்பகம்
செக்காலை ரோடு
காரைக்குடி - 630 001.

முதற் பதிப்பு : ஏப்ரல் - 2001

உரிமை : ஆசிரியற்கு

விலை ரூபாய் : 22.00

விக்கிரம-பங்குனி-23ல் (5-4-2001) வியாழக்கிழமை

காரைக்குடி.

கம்பன் திருநாள் விழாவில் நூல் வெளியிடப்பெற்றது.

வெளியீடு

பிள்ளையார் பதிப்பகம்

ஒளியகம்

எண் 13, அருணாசலம்தெரு

காரைக்குடி - 630 001.

கம்பன் கவிகள்

மலையென வளமை ஈயும்;
மதியென அமுதம் பெய்யும்;
அலைதெறி துளியே போல
அறிவினில் தண்மை சேர்க்கும்;
சிலைவடி வாகிச் சொற்கள்
சிந்தனை உணர்வைப் பூக்கும்;
கலைபொழி தேனோ கம்பன்
கனிமொழிக் கவிகள் அம்மா!

வழிவழி மரபைக் காக்கும்;
வண்மையை அடைய ஊக்கும்
அழிவழி அணுகு வார்க்கோ
அறநெறி உணர வைக்கும்
பழியழி சூல மாகும்;
பண்பமர் சால்பும் அன்பும்
மொழிவழி சொல்லும்; கம்பன்
முத்தமிழ்க் கவிகள் அம்மா!

முறைதுறை அறிவை ஊட்டும்;
முழுமையை அடையக் காட்டும்;
சிறையுடை அகந்தை நீக்கும்;
சிறுமையைப் போக்கும்; தேரில்
நிறைபொருள் இராமன் என்றே
நினைவினில் இருத்தும்; வாழ்வில்
இறைமையை அருளும்; கம்பன்
ஈடிலாக் கவிகள் அம்மா!

- முத்துமாலை

ரெ.மு.

படையல்

ஆயிரம் கமலம் பூக்க
அறிகதிர் போலும் தொண்டன்
ஆயிரம் பயிர்கள் வாழ
அருவிசேர் அன்பின் மைந்தன்
பாயிரம் ஆவான் கம்பன்
படைப்பினை ஆய்வோ ருக்கே
தூயவன் கணேசனார்தம்
துணையடி படைத்தோம் போற்றி!

மதுரை காமராசர்

பல்கலைக்கழகத் துணைவேந்தர்,

பேராசிரியர் மூ. சாலிகு அவர்கள்

தந்தருளிய

அணிந்துரை

தமிழ் கூறு நல்லுலகால் ‘ரெ.மு.’ என மதிப்போடும் மரியாதையோடும் அழைக்கப்பெறும் ரெ. முத்துக்கணேசனார், ‘கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும்’ காரைக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; தம் மாணவர் பருவத்திலேயே நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டவர்; சமயப்பணி, சமுதாயப் பணி, அறப்பணி என்னும் முத்திறப் பணிகளையும் பல்லாண்டுக் காலமாக ஆற்றி வருபவர்; கவிதை, கட்டுரை, உரைநூல், தொகுப்பு நூல் என்றாற் போல் பல்வேறு துறைகளைச் சார்ந்த இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பாங்குடன் வெளியிட்டு அன்னைத் தமிழுக்கு ‘கவிச்செம்மல்’, ‘கவிஞர்கோ’ ‘அரிமா’ என்னும் சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்; நிலையான பங்களிப்பினை நல்கி இருப்பவர்; அமெரிக்க நாட்டின் அரிசோனா மாநிலத்தில் உள்ள உலகப் பல்கலைக்கழகத்தால் இலக்கியத்தில் ‘முனைவர்’ பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலான வெளிநாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றித் தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் பெருமையை நிலைநாட்டியவர். இத்தகு சீரும் சிறப்பும் பீடும் பெருமையும் வாய்ந்த ரெ.முத்துக்கணேசனார்

அண்மையில் வெளியிட்டிருக்கும் 'கம்பன் தந்த கமலங்கள்' என்பது.

தமிழுக்குக் கதி என்று கம்பரையும் திருவள்ளுவரையும் முறையே சுட்டுவது சான்றோர் மரபு. இம் மரபில் மோனையைப் போல் முன்னிற்கும் கம்பரைப் பற்றிய பத்துக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 'கால் வண்ணம் அங்கு கண்டேன்; கைவண்ணம் இங்குக் கண்டேன்' என்பது கம்பர் வாக்கு; நாம் இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் வாயிலாகக் கவிச் சக்ரவர்த்தி கம்பனின் கவி வண்ணத்தை - கல்வியில் பெரிய கம்பர் பெருமானின் சொல் வண்ணத்தை - பொருள் வண்ணத்தை - கண்டு மகிழ்கிறோம். கம்பர் பெருமான் உணர்த்தும் 'இறைத் தத்துவத்தில்' தொடங்கிய இந்நூல், 'கம்பன் காட்டும் நதி'களில் முடிவு பெறுவது ஒரு நயம்; சிறப்பு. 'நதி எங்கே போகிறது' என்று கேட்டால் 'கடலைத்தேடி' என்பார்கள்; இங்கே ஒரு மாற்றம் 'இறை' என்னும் கடலில் தொடங்கிய ஆய்வுப் பயணம் 'நதி'களில் முடிவடைந்துள்ளது!

'உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்பம் உருவெடுப்பது கவிதை, தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தெரிந்து உரைப்பது கவிதை' எனக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவிதைக்குச் சொன்ன இலக்கணம், நூற்றுக்கு நூறு அப்படியே கட்டுரைக்கும் பொருந்துவதாகும். தேர்ந்த எழுத்தாளர் ஒருவர் படைக்கும் கட்டுரை இலக்கியம், அவரது உள்ளத்தில் இருந்து இன்பமே வடிவாக உருவாகி, தெள்ளத்

தெளிந்த தமிழ் - படிப்பவர் இன்புறும் பாங்கில் உண்மையைத் தெரிந்து உரைப்பதில் முழு வெற்றி பெற்றுள்ளன எனலாம். சான்றாக, 'இறைத் தத்துவம்' என்னும் அவரது முதற்கட்டுரை இப்படித் தொடங்குகின்றது.

"தமிழர்கள் இயற்கையைக் கண்டனர்; அதன் அழகில் ஆழ்ந்தனர் அதன் வளத்தினைப் பெற்றனர்; அதன் பயனை அனுபவித்தனர்."

தமிழரின் இயற்கை ஈடுபாட்டினை எளிய, இனிய சொற்களில் அமைந்த நடையில் இரத்தினச் சுருக்கமாக இங்கே சுட்டிக்காட்டியுள்ளார் ரெ.முத்துக்கணேசனார்.

வாசகர்களைப் படிக்கத் தூண்டும் வண்ணம் கட்டுரைகளுக்குத் தலைப்பிடுவது என்பது ஒரு கலை. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை இதில் கை தேர்ந்தவர். 'வேலும் வில்லும்', 'ஊரும் பேரும்', 'கங்கை வேடனும் காளத்தி வேடனும்', என்றாற்போல் எத்தனையோ தலைப்புக்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம். ரெ.முத்துக்கணேசனாரும் இவ்வகையில் பேராசிரியர் ரா.பி.சே.யை அடியொற்றி வருகின்றார். இராமன் திருவுள்ளம். 'இன்னுயிர்த் துணைவன்', 'வாழ்க உலகம்', 'தருமத்தின் தலைவிதி', 'பண்புக் கடல் பரதன்', 'அணி இலக்கண அழகு', என்றாற்போல் இந்நூலில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகளின் தலைப்புக்கள் அருமையும் எளிமையும் அழகும் வாய்ந்தவை ஆகும்; தொடர்ந்து கட்டுரைகளைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் படிப்பவர் மனத்துள் ஏற்படுத்தும் பான்மையனவாகும்.

இந்நூலுள் ஆங்காங்கே வள்ளுவரின் வாய்மொழிகளைத் தம் கருத்திற்கு அரணாகவும் அணியாகவும் கையாண்டிருப்பது ஆசிரியரின் பழுத்த தமிழ்ப் புலமையைப் பறைசாற்றுவதாகும்; திருவள்ளுவர் மீது அவர் கொண்டிருக்கும் மலையினும் மாணப் பெரிதான பற்றைப் புலப்படுத்துவதாகும். இதே போல், 'வாழ்க உலகம்' என்ற கட்டுரையில் உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் ஆகாகான் மாளிகையில் அந்நியரை எதிர்த்து இருபத்தொரு நாட்கள் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதத்தை எடுத்துக்காட்டியிருப்பது ஆசிரியரின் தேசிய உணர்வுக்குக் கட்டியம் கூறுவதாகும்.

இவ்வாறு பலவாறு சிந்தித்து உருவாக்கிய வீரிய சிந்தனைகளின் தொகுப்பாய் விளங்கும் 'கம்பன் தந்த கமலங்கள்' என்னும் இந்நூல் கம்பன் ஆய்வுக்கு அண்மைக் காலத்தில் கிடைத்துள்ள ஒரு நல்வரவாகும்; புதுவரவாகும். ஒல்லும் வகை எல்லாம் தமிழுக்குத் துறைதொறும் தொண்டாற்றிவரும் ரெ. முத்துக்கணேசனார் நல்ல உடல் நலத்தோடும் மன வளத்தோடும் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து வளம் பெற நெஞ்சார வாழ்த்துகிறேன்.

மதுரை - 625021
30.03.2001.

நூல் அச்சு விவரம்

நூற்பெயர்	:	கம்பன் தந்த கமலங்கள்
நூலாசிரியர்	:	கவிச்செம்மல் டாக்டர் ரெ. முத்துக்கணேசன்
வெளியீடு	:	பிள்ளையார் பதிப்பகம் ஒளியகம் 13, அருணாசலம் தெரு, காரைக்குடி - 630 001.
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியிட்டநாள்	:	5-4-2001.
பயன்பட்ட தாள்	:	மேப்லித்தோ
நூல் அளவு	:	1X 8 கிரௌன்
எழுத்தின் அளவு	:	12 Pt
அச்சிட்டநூல்கள்	:	1000 (ஆயிரம்)
விலை	:	ரூபாய் 22.00
அச்சகம்	:	ஸ்ரீ லெட்சுமி பிரிண்டர்ஸ், காரைக்குடி - 2
பைண்டிங்	:	காட்போர்டு
நூலக எண்	:	031, IEI : G
நூற்பிரிவு	:	கட்டுரைகள்.

ஆசிரியரின் படைப்புகள்

கவிதை

நல்லுரை வெண்பா
முத்துமாலை
இந்திய ஞானச்சுடர்கள்
மரகதக் கோவை
அமுதம்
திருவிளக்கு

கட்டுரை

தமிழர் வாழ்த்து
சித்தர் நெறி

உரைநூல்

முத்தொள்ளாயிரம்
தமிழ்த்தொகை
ஞானத்தமிழ்
தேவாரத் திருமொழிகள்
செவ்வலூர் மதுவ நாயகியம்மை
பதிற்றுப்பத்தந்தாதி
சரசுவதி அந்தாதி

நன்றி உரை

என்றும் உள தென்தமிழ் இயம்பி இசைகொண்ட கவியரசர் கம்பன் திருவிழாவில், கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் கலந்து கொண்டுள்ளேன். கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் முதலிய துறைகளில் பங்கு கொண்டுள்ளேன். கண்கண்ட தெய்வமாகத் திருநாவுக்கரசுப் பெருமானை எண்ணிய அப்பூதி அடிகளைப் போல, காணும் பொருள்களிலும், எண்ணும் எண்ணங்களிலும் கம்பனாகக் கண்ட கம்பன் அடிப்பொடியார் அமரர் சா.கணேசனார் திருவடிகளை வணங்குகிறேன்.

என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற உள்ளத்தால், தமிழையும் எண்ணும் பேரறிஞர் உயர்திரு மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு. சாலிகு, அவர்கள் நூலுக்கு அணிந்துரை தந்து நூலை வெளியிட்டார்கள். அவர்களுக்கு என் நன்றி.

காலத்தையும் வென்று உறுதிப்பாட்டோடு அறுபது ஆண்டுக்கும் மேலாகக் கம்பன் திருநாள் நடைபெறுகின்றது. அமரர் சா. கணேசன் அவர்களுக்குப் பின்னும் சிறப்பாக நடத்திவரும் காரைக்குடி, கம்பன் கழகத் தலைவர், செயலர், நிருவாக உறுப்பினர் பெருமக்கள் அனைவர்க்கும் என் நன்றி. நூல் அச்சிடும் காலத்து உடன் உதவிய, உயர்திரு பேராசிரியர் தெ. முருகசாமி அவர்களுக்கு என் நன்றி.

1.4.2001 *ரெ.மு.*

பொருள்		பக்கம்

கம்பன்
தந்த
கமலங்கள்

இறைத் தத்துவம்

தமிழர்கள் இயற்கையைக் கண்டனர்; அதன் அழகில் ஆழ்ந்தனர்; அதன் வளத்தினைப் பெற்றனர்; அதன் பயனை அனுபவித்தனர். நாள்தோறும் தோன்றும் கதிரவனின் செம்மை உள்ளத்தை ஈர்த்தது. கதிரவனை வணங்கினர். பருவ காலத்தில் கார்மேகம் மழை பொழிந்தது. மழையையும் அதன் கருணையையும் பாராட்டிப் போற்றினர். காலம் சென்றது. தமிழர் தம் சிந்தனை வளர்ந்தது. இவ்வியற்கைப் பொருள்களுக்கு அடிப்படையாக ஓர் இயக்கும் சக்தி இருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். இவ்வுலகை அறவழியில் நின்று நடத்திச் செல்வதற்கு வழிகாட்டும் மூலசக்தி ஒன்று இருக்க வேண்டுமென்றும் தெளிந்தனர். அந்த மூலப் பொருளை இறைவன் எனச் சுட்டினர்; பிறகு அப்பொருளுக்குப் பல வடிவங்களை அமைத்து, பலப்பல பெயர்களையும் ஈந்து போற்றி வணங்கினர்.

இவ்வகையில், ஒரு சாரார் 'சிவன்' என்றும், வேறொரு சாரார் 'திருமால்' என்றும் பெயரிட்டு மந்திரம் ஓதி வழிபட்டனர்.

இவ்வாறு திருமாலை முழுமுதற் பொருளாகக் கொண்டு வைணவப் பெருமக்கள் வணங்கினர். காலப்போக்கில், வைணவசமயம் வளர்ந்தது. ஆழ்வார் பெருமக்கள் தோன்றி, மேலும் வைணவ நெறியைப் பாமலர்களால் பரப்பினர், ஆழ்வார்கள் திருமாலை, கருணைக் கடலாகக் கண்டார்கள். அப்பெருமானின் திருவுருவ அழகில் ஈடுபட்டனர்; அப்பெருமானது அன்பு மழையில் நனைந்தார்கள்; அவனது எளிமையை எண்ணி எண்ணி இறும்பூ தெய்தினார்கள். மேலும், அவனை, பொய்வண்ணம் மனத்தகற்றிய மெய்வண்ண வித்தகனாகக் கண்டார்கள். அப்பெருமான் திருவருளில் தம்மை இழந்தார்கள்; அவன் அருளைப் பெற்றார்கள். அருள் பெற்ற இன்பத்தை ஆயிரம் ஆயிரம் பாசுரங்களால் பாடிப் பாடித் திருமால் நெறியைப் பரப்பினார்கள்.

இவ்வாறு பரப்பிய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவார்கள். அவர்களில் தலைமைப்பண்பு பெற்றவர் நம்மாழ்வார் ஆவார்; அவர் வைணவ சமயத் தொண்டர்களின் தளபதி எனப் போற்றப்படுவர். அவர் உள்ளம் தமிழ் உள்ளம். அவர், தான் அனுபவித்த இறை இன்பத்தை, பேரானந்தத்தை திருவாய் மொழித் திருமந்திரத்தால் உலகுக்கு அளித்தார்கள். அவர்தம் உள்ளத்துக்குள்ளேயே முகிழ்த்த ஞான வாக்குகள் தமிழ் மறைகளாக மலர்ந்தன.

“என்னெஞ்சத் துள்ளிருந்து
இருந்தமிழ்நூல் இவைமொழிந்து
வன்னெஞ்சத்(து) இரணியனை
மார்விடந்த வாட்டாற்றான்”

என உரைப்பர் நம்மாழ்வார்.

நம்மாழ்வார் தாம் அருளிய ஞானச் செல்வமாகிய திருவாய் மொழியில் இறைத் தத்துவத்தை ஒரு பாடலில் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். அதில், இறைவன் ஒருவன்தான். அவ்விறைவன் நாராயணனே ஆவான்; அப்பெருமான் இவ்வுலகில் வானம், நெருப்பு, நீர், காற்று, நிலம் முதலியவற்றைப் படைத்தவன்; இப்பொருள்களை அனுபவிக்க, பலப்பல உயிர்களையும் தோற்றுவித்தவன்; தோற்றுவித்த உயிர்கள் நலம்பெற அவைகளைக் காப்பவன்; பிரளய காலத்தில் இவற்றைத் தானே தனக்குள் அடக்கி மறைப்பவன்; இவ்வுலகில் எவ்வாறு உடலில் உயிர் தங்கி இயங்குகின்றதோ அவ்வாறே எல்லா உயிர்களினுள்ளும் இறைவன் ஒன்றி இருந்து அவ்வப் பொருள், உயிர் முதலியவற்றின் நிலைகளுக்கேற்ப இயக்குகின்றான் என்னும் இறைத் தத்துவத்தை மிக அழகாக அமைத்துக் கூறுகிறார்.

‘திடவிசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவது மாய் அவை அவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே!

- நம்மாழ்வார் திருவாய்மொழி

என்பதாகும்.

இந்தத் தத்துவத்தைப் பின்னாளில் இராமாநுசர் "விசிஷ்டாத்துவைதம்" என்ற நெறியாகப் பரப்பி புகழ் கொண்டார்; இத்தத்துவம் 'இராமாநுச தரிசனம்' எனவும் வழங்கப் பெற்றது.

நிற்க, மேற்கண்ட இறைத் தத்துவம் கவியரசர் கம்பர் பெருமானின் திருஉள்ளத்தில் கால் கொண்டது. இத்தத்துவ உண்மையைப் பலகாலும் சிந்தித்து, அதன் வயமானார் கம்பர். தாம் பாடிய இராம காதையில் இத்தத்துவத்திற்கு மிக நல்ல வடிவம் அமைத்து, இதன் உண்மையை நமக்கு அழகாக உணர்த்துகின்றார்.

இராமகாதையில், இராவணன் அமைச்சர் அவையைக் கூட்டி ஆலோசனை செய்கிறான். அதில் முதல் கட்டத்தில் கலந்து கொண்ட வீடணன், அண்ணன்பால் பலவாறாகப் பற்பல நீதிகளை எடுத்து உரைக்கின்றான். இடையிடையே நீதிக்கதைகளை எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறான். அதில் ஒன்று, இரணியன் வாழ்வையும், அகந்தையால் அவன் பெற்ற வீழ்ச்சியையும் நன்கு பதியுமாறு கூறுகிறான். உண்மையில், இந்த இரணிய வதைப் படலம், இராமகாதைக் கோபுரத்துக் கலசமாக, அற்புதப் படைப்பாகக் கம்பர் படைத்தளிக்கின்றார்; அக்கதையில், பிரகலாதன் வாயிலாக, இறைத் தத்துவத்தை விளக்குகின்றார்.

பிரகலாதன் தன் தந்தையை நோக்கிப் பேசுகிறான். நாம் வாழும் இவ்வுலகைப் படைத்த முழுமுதல் பொருள், தன்னுள்ளிருந்தே இவ்வுலகைப் படைத்தனன்; படைத்த அப்பொருள்களுக்குள்ளேயே தங்கி, ஒன்றி இருந்து, அப்பொருள்களை

இயக்குகின்றான்; நீர்-தீ-காற்று-நிலம்-வானம் ஆகிய பஞ்ச மூலப் பொருள்களாகவும் இருக்கின்றான். மேலும், பலப்பல உயிர்களையும் தோற்றுவிக்கின்றான். தோற்றுவித்த உயிர்கள் தோறும், அவ்வுயிர்களோடு பொருந்தி, ஒன்றி இருந்து இயக்குகின்றான். மலர்களின் மணமும் அவன்; எள்ளில் உறையும் எண்ணெயும் அவன்; அவன் முன்னும் பின்னும் இல்லாதவன்; அறிவுக்கும் அறிவானவன். உயிர்ப்பொருள்களோடும், ஏனைய உயிரற்ற பொருள்களோடும் கலந்தும் பரவியும் அவ்வவற்றைக் காக்கும் மூலப்பொருளுமாவான். அந்த மூலப் பொருளே 'திருமால்' என்று நீ அறிவாயாக! எனப் பிரகலாதன் கூறினான்.

தன்னுள்ளே உலகங்கள்
எவையும் தந்துஅவை
தன்னுள்ளே நின்று, தான்
அவற்றுள் தங்குவான்;

பின் இலன், முன் இலன்
ஒருவன்; பேர்கிலன்;
தொல்நிலை ஒருவரால்
துணியற் பாலதோ?

கண்ணினும் கரந்துளன்;
கண்டு காட்டுவார்
உள்நிறைந்திடும் உணர்வு
ஆகி, உண்மையால்

மண்ணினும் வானினும்
மற்றை மூன்றினும்
எண்ணினும் நெடியவன்
ஒருவன் என்இலான்

(வேறு)

உலகுதந் தானும் பல்வே (று)
உயிர்கள் தந் தானும் உள்உற் (று)
உலைவிலா உயிர்கள் தோறும்
அங்கங்கே உறைகின் றானும்
மலரினில் மணமும், எள்ளில்
எண்ணெயும் போல எங்கும்
அலகில்பல் பொருளும் பற்றி
முற்றிய அரிகாண் அத்தா!

-கம்பர்
(யுத்த காண்டம்)

இவ்வாறு தம் பாடல்களின் மூலம் எல்லாமாய் இலங்கும் இறைத் தத்துவத்தை நம் உள்ளத்தில் எளிதாகப் பதிய வைத்துத் தெளிவிக்கின்றார் கம்பர் பெருமான்.

இராமன் திருவுள்ளம்

ஒரு நாடு பண்புடைய நாடாக அமைய வேண்டுமானால், அந்த நாடு காலத்தை வென்று நிற்கும் இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்க வேண்டும். இலக்கியங்கள் சமுதாயம் வாழ வழிகாட்டுகின்றன; தனிமனித வாழ்வைத் தூய்மைப் படுத்துகின்றன; சாதி, மத பேதங்களை மறந்து உள்ளத்தால் ஒன்று கூடும் பெருமன்றமாக இலக்கியங்கள் திகழ்வதால் ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன; மேலும், மொழியைப் பாதுகாக்கும் கருவியாகவும், நாட்டைப் பாதுகாக்கும் அரணாகவும் அமைகின்றன.

கவிஞன், தன் கவிதைகளின் மூலம் இலக்கியத்தைப் படைக்கின்றான்; படைக்கத் தொடங்குமுன், அவன் தனிமனிதனாகத் தனித்திருந்து சமுதாயத்தை நோக்குகிறான். சமுதாய வளர்ச்சியைப் பற்றி எண்ணுகிறான்; அதன் நிறை குறைகளை ஆராய்கிறான்.

சமுதாயத்தில் பல மனிதர்களைச் சந்திக்கிறான். சந்திப்பின் மூலம் பலதரப்பட்ட மனித எண்ணங்களின் கூறுகளை உணர்கிறான். மனிதர்களை ஒரு பால் ஆசையும் பொறாமையும் ஆட்டிப் படைக்கக் காணுகின்றான்; மற்றொருபால் காமமும், சினமும் மனிதனைக் கைப்பாவையாக்கும் செயலையும் அறிகின்றான். இத்தகைய உணர்வுகளை ஒதுக்கித் தள்ளும் மனவலிமையை மானிட சமுதாயம் பெற்று முன்னேறவேண்டுமேன்று கவிஞன் பலவாறு வழிகளைச் சிந்திக்கின்றான். இவ்வாறு, பலவாறு சிந்தித்து உருவாக்கிய சிந்தனைகளின் தொகுப்புக்களே இலக்கியங்களாகும்.

தமிழகத்தில் பலப்பல இலக்கிய நூல்கள் ஒவ்வொரு காலச் சூழ்நிலையில் கவிஞர் பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டன. அவை காலத்தை வென்று தமிழ் மக்களுக்குப் பல பேருண்மைகளை, நீதிகளைப் பரப்பின. பெரும்பெரும் காப்பியங்களும் புலவர் பெருமக்களால் படைக்கப்பட்டன. இவ்வாறு தோன்றிய காப்பியங்களுள் கவியரசர் கம்பர் படைத்த இராமகாதை பேரும் புகழும் பெற்று மக்கள் உள்ளத்தில் தனி இடத்தைப் பெற்றது. கம்பர் தம் காப்பியத்தில், பாத்திரங்களின் வாயிலாக, சமுதாய முன்னேற்றத்திற்குரிய பேருண்மைகளை, நீதிகளை வகைப்படுத்தி, ஒளி வீசும் ஒளிக்கற்களைப் போன்று அமைத்து நமக்கு வழிகாட்டுகின்றார்.

மனிதனுடைய மனத்தத்துவத்தை நன்கு அறிந்தவர் கம்பர் பெருமான். வாழ்வில் மனிதன், தன் உள்ளத்தே தோன்றும் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டுத் தடுமாறும்

பற்பல நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறார். அதே சமயத்தில் உள்ளத்தே எழும் உணர்வுகளை உள்ளடக்கி, உணர்வுகளைத் தனக்கு அடிமையாகக் கொண்ட மனிதனையும் பார்த்திருக்கிறார். இவ்வாறு இருவேறுபட்ட மனிதர்களையும் கண்ட அனுபவப்பட்ட கம்பர், எத்தகைய உணர்வுகளுக்கும் ஆட்படாத நிறைமனிதனாக, வழிகாட்டும் ஒரு பாத்திரமாக இராமபிரானைத் தம் காப்பியத்தில் நமக்குச் சித்தரித்துக் காட்டுகின்றார்.

மனித வாழ்வில் இன்பம் வருகின்றது; அடுத்துத் துன்பமும் தொடர்கின்றது. இரு சக்கர வண்டி போல இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் பொழுது மனித வாழ்க்கையில் அதனதன் சார்பாக நிகழ்ச்சிகள் நெய்யப்படுகின்றன. இன்பத்தை அனுபவித்த மனிதன் அதனை வரவேற்று மகிழ்கின்றான்; ஆனால் அடுத்து துன்பம் வரும்பொழுது துவண்டு விடுகிறான். எந்த இயற்கை இன்பத்தை அனுப்பி வைத்ததோ அந்த இயற்கை தானே துன்பத்தையும் அனுப்பி வைத்தது என்றும் உணர்ந்தானில்லை மனிதன். இவன் அனுபவித்த இன்பம் இவனிடத்தில் நிலைபெறுவதற்கு உதவியாகவே அத்துன்பம் வருகின்றது என்ற அறிவுத் தெளிவையும் பெற்றானில்லை. ஆகவே, மனிதன், இன்பம் வரினும் துன்பம் வரினும் இன்பதுன்பங்களை நிறை மனத்தோடு வரவேற்கத் தம் மனத்தைப் பயிற்றிக் கொள்ள வேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக எண்ணும் நிலைத்த உறுதியான மனநிலையைப் பெறவேண்டும். பொதுவாக, இவ்வாறு மனம் பெற்றவர்களை 'ஸ்திர புத்தியுடையவர்கள்' என வடநூலார் கூறுவர்.

"புகழையும் இகழையும் நிகராகக் கொண்ட மௌனி யாதுவரினும் அதில் மகிழ்ச்சியுறுவான். துன்பத்திலும் இன்பத்திலும் சமநிலைப்பட்டவன். நன்மையையும், தீமையையும் துறந்தவன். பற்றுவிட்டவன்; உறுதி படைத்த 'ஸ்திர புத்தியுடையவன்' இவ்வாறு அமைந்த பக்தன் எனக்கு இனிமையானவன்".

- கீதை - 12. பக்தியோகம்
எண் 17,18,19.

மொழிபெயர்ப்பு -
மகாகவி சுப்ரமணிய பாரதியார்.

இதுபோல் இன்ப துன்பங்களை உள்ளடக்கிச் சமநிலையில் எடுத்துக்கொண்டு உறுதி படைத்த நிலைத்த மனமுடையவனாக வேண்டுமென்று கீதை மொழிகின்றது.

இந்தப் பேருண்மையை, கம்பர் நம் உள்ளத்தில் எவ்வளவு அழகாகப் பதித்துக் காட்டுகின்றார் என்பதைப் பார்ப்போம்.

தயரதன் தான் முதுமை அடைந்து விட்டதை உணர்ந்தான். இனி ஆட்சிப் பொறுப்பை இராமனிடம் கொடுத்து, அவனுக்கு முடி சூட்டுவதென்று முடிவு செய்தான்; அமைச்சர் குழுவை அழைத்தான். தன் முடிவைத் தெரிவித்தான். அமைச்சர் குழு பெருமகிழ்ச்சியோடு ஒப்புதல் அளித்துப் பாராட்டினார்கள். அடுத்து, ஊர்ப் பொதுமக்களில் பலரை அழைத்தான். அவர்களும் மன்னன் கருத்தினுக்கு ஆதரவு அளித்தனர். அதன்பின், தன் கீழ் உள்ள, சிற்றரசர்கள் அனைவருக்கும் ஓலை அனுப்பி

ஒருசேரக் கூட்டினான். அவர்களும் தயரதன் கருத்தினை ஏற்று, தயரதனையும் இராமனையும் புகழ்ந்தனர். எல்லோருடைய ஒப்புதலையும் பெற்ற பின்னர் இராமனை அழைத்து வருமாறு கூறினான். தயரதன் இராமனை நோக்கிக் கூறுகிறான். நான் நீண்ட நாட்கள் ஆட்சி செய்துவிட்டேன். இப்பொழுது முதுமை எய்திவிட்டேன். ஆகவே ஆட்சிப் பொறுப்பை நீதான் ஏற்க வேண்டும். விரைவில், உன்னைச் சக்கரவர்த்தியாக முடி சூட்டி வைத்து, அதன்பின் நான் ஓய்வு பெறவேண்டும். உன் கருத்தினைச் சொல்வாயாக, எனக் கேட்கிறான் தயரதன்.

தாதை, அப்பரிசு உரைசெய
தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்;
கடன்இது என்றுணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது
அதுசெயல் அன்றோ!
நீதி எற்கென நினைந்து
அப்பணி தலைநின்றான்!

- அயோத்தியா காண்டம்
மந்திரப்படலம்.

தயரதன், இராமனிடம் ஆட்சியை ஈந்து முடிசூட்டுகிறேன் என்று சொன்னவுடன் இராமன் அதிக மகிழ்ச்சியையும், அதிக விருப்பத்தையும் அடையவில்லையாம். ஆராய்ந்து அரசன் எதைச் செய்யச் சொல்லுகிறானோ அதைச் செய்வதுதான் எனக்குக் கடமையும் நீதியுமாகும். ஆகவே நாட்டை ஆள்வதற்கு ஒப்புதலைத் தெரிவித்து, அப்பணி செய்ய முற்பட்டான் இராமன் என்கிற பாடல்.

இந்த இடத்தில் இராமபிரானது திருஉள்ளத்தைக் காட்டுகின்றார் கம்பர். உனக்கு முடிசூட்டிச் சக்கரவர்த்தியாக்குகிறேன் என்ற தயரதன் வாய்ச்சொல், இராமனுக்கு அளவு கடந்த பேரானந்தத்தை அளிக்கவில்லையாம்; சாதாராண மகிழ்ச்சியை அடைந்தானாம்; மேலும் விருப்பு வெறுப்பின்றி, முகமலர்ச்சியோடு, அரசன் இட்ட பணியை ஏற்றான் என்று கம்பர் சொல்லுவதின் மூலம், இராமன் தன்னை எதிர்நோக்கி வந்த இன்பத்தில் மூழ்கிவிடாமல், இன்ப துன்ப நிலைகளைச் சமமாக ஏற்கும் ஒருநிலைப்பட்ட மனத்தோடு இங்கு செயல்பட்டான் என்ற உண்மையை வலியுறுத்திக் காட்டுகின்றார்.

பின்னர் தயரதன் முடிசூட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்கிறான். நாள் நெருங்கிற்று. மந்தரை சூழ்ச்சி செய்யத் தொடங்கி விட்டாள். அவள் வஞ்சக உரையில் கைகேயி விழுந்து விட்டாள். முதல்நாள் இரவில் தயரதனுடன் முன்பு சொன்ன வரங்களைப் பெறப் போராடினாள். உடல் தளர்வாலும், மனத்தளர்வாலும் வரம் ஈந்தேன் என்று சொல்லி மயங்கி வீழ்ந்துவிட்டான்.

பொழுது புலர்ந்தது. கதையும் திருப்பம் அடைந்தது. கைகேயி இராமனைக் கூட்டிவரச் சொல்லுகிறாள். இராமனும் வந்து, வணங்கி நின்றான். இராமனை நோக்கி கைகேயி சொல்லுகிறாள்.

'ஆழிசூழ் உலக மெல்லாம்
பரதனே யாள, நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு

பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணிய நதிகள் ஆடி
ஏழிரண் டாண்டில் வாவென்(று)
இயம்பினன் அரசன் என்றாள்'

- கைகேயி சூழ்வினைப்படலம்.

இந்தப் பரந்த உலகை என் மகன் பரதன் முடிசூடி ஆள வேண்டும். நீ, முடிதுறந்து, துறவு ஏற்றுத் தவக்கோலம் பூண வேண்டும். காட்டினை அடைந்து, பலப்பல புண்ணிய நதிகளில் நீராடிப் பின் பதினான்கு ஆண்டுகள் கழித்து இங்கு வருக என்று அரசன் கட்டளையிட்டுள்ளான் என்று சொன்னாள்.

இத்துன்பச் சொல்லைக் கேட்ட இராமன், மகிழ்ச்சியோடு ஏற்றானாம். அவ்வாறே செய்கிறேன் என்று சொல்லி அப்பொழுதே கைகேயிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

இந்த இடத்தில், இராமபிரானடைய திருஉள்ளத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுகிறார் கம்பர்.

'இப்பொழுது எம்ம னோரால்
இயம்புதற்கு எளிதோ? யாரும்
செப்பரும் குணத்து இராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா

- கைகேயி சூழ்வினைப்படலம்

என்பது பாடல்.

கைகேயி, இராமனை நோக்கி உனக்குப் பட்டம் இல்லை, காட்டிற்குப் போவாய், பரதன் முடி சூட்டி நாட்டை ஆள்வான் என்று சொன்னதும், எதிர்பாராது வரும் கொடிய துன்பத்தை உறுதி படைத்த ஒருநிலைப்பட்ட மனத்தோடு சமமாக அத்துன்பத்தை ஏற்றான் என்று கூறுகிறார். மேலும் துன்பச் சொல்லைக் கேட்ட அவன் முகம் அன்றலர்ந்த செந்தாமரையின் அழகையும் வென்றது என்று கூறி அவனது உறுதியைக் காட்டுகின்றார். ஆக இன்ப துன்பங்களை இராமன் சமமாக ஏற்கும் உறுதி படைத்த ஒருநிலைப்பட்ட உள்ளத்தை உடையவன் என்று கூறி இராமபிரானது திருஉள்ளத்தை நமக்குக் கோயில் சேர் கோபுரம் போல் காட்டுகின்றார் கம்பர்.

முதற் சந்திப்பு

கவியரசர் கம்பர் அருளிய காப்பியப் படைப்பு இராமகாதையாகும். அக்காப்பியத்தில் கம்பர் பெருமானுடைய உயர்ந்த உள்ளத்தை நாம் சந்திக்கலாம். கம்பரால் உருவாக்கப் பெற்ற உயர்ந்த பாத்திரங்களையும் சந்திக்கலாம்; அவர்களின் பண்பு நலன்களையும் நாம் சந்திக்கலாம்.

மாபெரும் கவிஞன் கம்பன் தான் படைத்த காப்பியத்தில் பல பாத்திரங்கள் நம்மைச் சந்தித்து நம்மோடு உறவாடுகிறார்கள்; மேலும் அவர்கள் நம் கருத்துலகில் நம்மைச் சந்திக்கிறார்கள். அவர்கள், ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டவர்-களாயினும் கம்பனுடையகவிதையின் ஆற்றலினால் நம்மோடு தொடர்புடையவர்களாக ஆகி விடுகிறார்கள். கவியரசன் கம்பன் புதிய நோக்கில் வாழ்வின் நெறிக்கேற்ப உயர்ந்த கருத்துக்களை வெளியிடும்

ஆற்றல் படைத்தவன்; ஆழ்ந்து விரிந்தகன்ற தத்துவங்களைச் சுருங்கத் தெளிவாகச் சொல்லும் திறன் படைத்தவன். மனோ தத்துவ இயல்புகளை அலசி அதன் நுணுக்கங்களைப் பாத்திரங்களின் வாயிலாகப் பரப்பும் திறன் படைத்தவன்; மக்களின் இதயத்தில் ஊறும் அன்பு உணர்ச்சியை உணர்த்துபவன் அற உணர்ச்சியை எடுத்து உரைப்பவன்; அறிவுப் பின்னலால் மயக்கும் வாதப் பிரதிவாதங்கள் அவனது கவிதைச் சொற்களிலே இல்லை; நீதியை நிலைநாட்டும் நெஞ்சுறுதியைக் காணலாம். இவ்வாறு புதிய முறையில் காலத்தோடு ஒட்டிய ஒரு காப்பியத்தை ஒரு கவிஞன் இயற்றுவது அத்துணை எளிதல்ல! எத்தனையோ இடர்கள் கம்பது வாழ்க்கையில் அவனைச் சந்தித்தன. ஆனால், கம்பன் அவற்றை எல்லாம் கடந்து, காலத்தை வென்று நிற்கும் ஒரு காப்பியத்தைச் செய்து முடித்தான். அக்காப்பியத்தில், அவன் சந்திக்க விட்ட பாத்திரங்களையும், சந்திக்க வைத்த வழி முறைகளையும் பார்ப்போம்.

இராமன் சீதையைப் பிரிந்தான்; வாடினான்; வருந்தினான்; தன் தம்பி இலக்குவனோடு சீதையைத் தேடிக்கொண்டு வருகிறான்; இடையில் சபரியைச் சந்திக்கின்றான்; சபரியும் இராமனுடைய வருத்தத்தை உணர்ந்து கூறுகிறாள். வாலிக்கு அஞ்சி ருசியமுக மலையில் சுக்கிரீவன் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான்; அவனிடம் படை இருக்கிறது. அவனுடைய துணையையும் நாடி சேர்த்துக் கொண்டால், அத்துணையும் நமக்கு நலம் பயக்கும் என்று சபரி இராமனிடம் கூறுகிறாள். அதனை ஏற்ற இராமன், தம்பியோடு அம்மலையை நாடிச் செல்கின்றான்.

மலைமேல் ஏறிவரும் மனிதர்களைக் கண்ட சுக்ரீவன், இவர்கள் வாலியின் ஏவலால் வரும் பகைவர்களே என்றெண்ணி அனுமனிடம் கூறுகிறான். அனுமன் சிந்தித்து, சுக்ரீவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு, எந்த நோக்கில் இம்மனிதர்கள் மலைக்கு வருகிறார்கள் என்று நான் அறிந்து வந்து சொல்லுகிறேன் என்று கூறி முயற்சியில் ஈடுபடுகிறான். ஒரு பாறைக்கு அருகே, மாணவக் கோலத்தோடு மறைந்து நின்று கூர்ந்து அவர்களைப் பார்க்கின்றான்.

அனுமன் இராம இலக்குமணர்களை நோக்குகிறான். அவர்கள் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர்களாக இருக்கின்றனர்; தோள்வலியும் போர்த்தொழில் வல்லமையும் உடையவர்களாகத் தோன்றுகின்றனர்; ஆனால் அவர்கள் துறவிகளைப் போன்று மரவுரியும் சடைமுடியும் தரித்திருக்கின்றார்களே? இவ்வாறு உடலில் தவவேடப்புனைவும், கையில் கோதண்டமும் கொண்டு காட்சியளிப்பது வியப்பாக அல்லவாயிருக்கிறது என ஆழ்ந்து சிந்திக்கின்றான் அனுமன், இதனைக் கம்பர்

'அஞ்சனைக் கொருசிறுவன் அஞ்சனக் கரியனைய
மஞ்சனைக் குறுகிஒரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையர் என
நெஞ்சயிர்த்து அயல்முறைய நின்றுகற் பினில் நினையும்

- கிட்கிந்தா காண்டம்
அனுமப் படலம்.

என்று அனுமனின் சிந்தனையைச் சித்தரிக்கின்றார்.

இவ்வாறு ஆழ்ந்து சிந்திக்கின்ற அனுமனை இராம

இலக்குமணருடைய தோற்றப் பொலிவு கவர்ந்தது. தன்னை அறியாமல் ஒருவகை அன்பு தனக்குள் முகிழ்க்கக் கண்டான் அனுமன்; அவர்களின் உள்ளத்தை மேலும் துருவி ஆராய்ந்தான். அவர்களுடைய உள்ளமும் ஏதோ ஒன்றைத் துருவிப் பார்ப்பது போல் தோன்றியது அனுமனுக்கு! அவர்கள் பார்வையிலும் ஆழ்ந்த சிந்தனை தேங்கியுள்ளதை உணர்ந்தான். அப்பார்வையும் வெகு தொலைவும் ஊடுருவிப் பார்ப்பதாயமைந்திருக்கக் கண்டான்; ஆனால் அப்பார்வையில் ஏதோ அருமையான ஒன்றை இழந்ததைத் தேடும் உணர்வு படர்ந்திருப்பதையும் உணர்ந்தான் அனுமன். இவ்வாறு கண்களிலும் முகத்திலும் தேங்கி நிற்கும் உணர்வையும், தோற்றப் பொலிவையும் வைத்து ஒரு முடிவுக்கு வந்தான் அனுமன். உண்மையில் இவர்கள் இழந்த ஒன்றைத் தேடி வருபவர்கள்தான். ஏனெனில் இவர்கள் முகத்தில் விளங்குகின்ற ஒளியினால் இவர்கள் தருமத்தையும், நல் ஒழுக்கத்தையும் செல்வமாகக் கொண்டவர்கள் என்றே தெரிகிறது; மேலும் இவர்கள் இழந்த பொருள் மண்ணுமல்ல! பொன்னுமல்ல! அஃது ஊழ்வினையாலும் பெருமுயற்சியினாலும் பேராண்மையைக் காட்டிப் பெற்ற கிடைத்தற்கரிய அமுதத்தை ஒத்ததொன்றாகத்தான் இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒப்பற்ற தன் பேரறிவால் ஆய்ந்து முடிவுக்கு வருகிறான் அனுமன். இதனை -

தருமமும் தகவும்இவர்
தனமெனும் தகையர் இவர்
கருமமும் பிறிதோர் பொருள்
கருதியன்று அது கருதின்

அருமருந்து அனையதுஇடை
அழிவுவந் துளதுஇதனை
இருமருங் கினும் நெடிது
துருவுகின்ற னர்இவர்கள்

- கிட்கிந்தா காண்டம்
அனுமப்படலம்

எனக் கம்பர் கூறுவர்.

பொதுவாக, அன்பானது இறைவனால் படைக்கப்பட்ட எறும்பு முதல் மனிதன் வரை உள்ள உயிர்களிடத்தில், அதனோடு பற்றிக்கொண்டு ஒருவகை உள்ளுறவை ஏற்படுத்திவிடும்; மேலும், உள்ளம் ஒன்றிய நட்பையும் தந்து உதவும் என்று கூறுவர் திருவள்ளுவர்.

'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு'

- திருக்குறள்
அன்புடைமை பா. எ. 74.

என்பது குறள். அனுமனும் இராம இலக்குமணரைப் பார்த்த அளவில், முதன் முதலில் சந்தித்த அளவில் தன்னை அறியாத ஒருவகை அன்புணர்ச்சியை அடைந்தான்; அந்த அன்பு உள்ளத்து உறவை ஒன்றுபடுத்தியதாக உணர்ந்தான்; இணைபிரியாது வாழும் செறிந்த நட்பில் பிணைப்பதாக எண்ணினான். இம்மாதிரி பழகியறியாத, காரணம் கூறு முடியாத உணர்ச்சியோடு ஒன்றிய அன்புநிலை என்ற ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அத்தகைய நிலைதான்

அனுமனை ஆட்கொண்டுவிட்டது. முதல் சந்திப்பிலேயே இராம இலக்குமணர்பால் உள்ளத்தை இழந்தான்; அன்பு கிளர்ந்து எழுந்தது; பலநாட்கள் பழகியவர்கள் காலத்தால் பிரிய நேரிடுகிறது. பின் அவர்கள் ஒன்று கூடுவார்களேயானால், எத்தகைய அன்புப் பெருக்கில் திளைப்பார்களோ அத்தகைய அன்புப் பெருக்கினைக் குணத்தால் உயர்ந்த, ஒப்புமை கூறுமுடியாத அனுமன் அடைந்தான். இதனை,

என்பன பலவும் எண்ணி
இருவரை எய்த நோக்கி
அன்பினன் உருகு கின்ற
உள்ளத்தன் ஆர்வத் தோரை
முன்பிரிந் தனையர் தம்மை
முன்னினான் என்ன நின்றான்
தன் பெருங் குணத்தால் தன்னைத்
தானலது ஒப்பி லாதான்

-கிட்கிந்தா காண்டம்
அனுமப்படலம்.

என்பர் கம்பர்.

மேலும், அனுமனுக்கு, இந்த இருவர்களைப் பார்த்த அளவிலே, அவர்களுடைய குணநலன்களையும் ஒருவாறாக ஊகித்து அறிகிறான். இவர்கள் கருணை மிக்கவர்கள்; இவர்கள் கால்பட்ட அளவிலே சுடுகற்கள் கூட ஈரமலர்களைப் போல் மென்மையாகிவிடும் போலிருக்கிறது. இவர்கள் செல்லும் திசைகள் தோறும், மரங்களும் புல்லும் எல்லாம் சாய்வதால் வணங்குகிறது போலும் என்றெல்லாம் எண்ணுகிறான். இவ்வாறு

எண்ணி, இவர்கள் இவ்வுலகிற்கு வந்த தரும தேவதைகள் ஆவார் என்றே முடிவுக்கு வருகிறான். பிறகு தனக்குள்ளே

காய்எரி கனலும் கற்கள்,
கள்ளுடை மலர்க ளேபோல்,
தூ யசெய் கமல பாதம்
தோய்தொறும் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறும்
புல்லொடு மரனும் எல்லாம்
சாய்வுறும், தொழுவபோல் இங்கு
இவர்களோ தருமம் ஆவார்

இவ்வாறு அனுமன் கூறிக் கொள்கிறான்.

பின், இராம இலக்குமணர் பால் அன்பு மீதூரக் காதல் கொண்டு அனுமன் சிந்தித்த நிலையில் இருந்தனன். இந்த நிலையில் அவன் பக்கமாக அவர்கள் இருவரும் சென்றனர், உடனே அனுமனும் அவர்கள் அறியும் வண்ணம் எதிர் சென்றான். இந்த இடத்தில் கம்பர் பெருமான் அனுமனின் உயர்ந்த உள்ளத்தை, இராமன்பால் அறிமுகம் ஆகப் போகும் பொழுது மிக உயர்ந்த சொல்லால் அனுமனைக் குறிப்பிடுகின்றார். எஞ்ஞான்றும் மிக உயர்ந்த எண்ணங்களின் வழியிலேயே தன்னுடைய செயல்களைச் செலுத்துபவன் அனுமன் என்பதை ஒரு தொடரால் குறிப்பிடுகிறார் கம்பர். அத்தொடர் தான் 'செவ்வழி உள்ளத்தான்' என்பதாகும்.

இவ்வகை எண்ணி, ஆண்டு
அவ்விருவரும் எய்த லோடும்

'செவ்வழி உள்ளத் தானும்'
தெரிவுற எதிர்சென்று எய்தி!

- கிட்கிந்தா காண்டம்
அனுமப்படலம்.

இந்த இடத்தில், இராமனை அனுமன் வாயிலாக தருமத்தின் உருவம் என்று குறிப்பிட்ட கம்பர், தருமத்தின் உருவை எதிர்நோக்கும் பாத்திரமும் உயர்ந்த ஒழுக்கமும் ஆற்றலும் ஒன்றிய பாத்திரமாக இருக்க வேண்டுமல்லவா? அதற்காக, அதனைச் சுட்டவே அனுமனை, செவ்வழி உள்ளத்தவன் எனக் குறிப்பிட்டு நம்மை உணர வைக்கிறார். ஆக தருமத்தைச் செவ்வழி உள்ளம் முதன் முதல் சந்தித்தது என்று கூறுகிறார்.

மண்ணுலகத்து நல்லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டு வந்தான்
பண்ணில் இசைத்து அவ்வொலிகள்
அனைத்தையும் பாடி மகிழ்ந்திடுவோம்!

என்று மகாகவி பாரதியார் கூறுகிறபடி தமிழகத்தார் உள்ளமே நமது கம்பன் மூலம் பேசக் கேட்கின்றோம்.

இவ்வாறு காப்பிய உலகில் புதிய மரபுகளையும், சிறந்த சிந்தனைக்குரிய அமைப்பு முறைகளையும் படைத்துத் தந்த கம்பனைப் போற்றுவோமாக!

நல்லறம்

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் அறம் இன்றியமையாததொன்றாகும். அவ்வறம் நல்லறமாகத் திகழ வேண்டுமானால், நடைமுறையில் எல்லா மனிதர்களுக்கும் நன்மை தரக் கூடியதாக அமைய வேண்டும். நல்ல மணமிக்க மலர் இருக்கிறது. அம்மலரின் மணம் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியை அளிக்கின்றது; உடலுக்கத் தெம்பை ஊட்டுகின்றது; ஆனால், அம்மலர் ஒரு காலம் மட்டும் நறுமணத்தையும், வேறு சில காலங்களில் தீய மணத்தையும் கமழச் செய்யலாமோ? நறுமண மலரிலுள்ள நறுமணம் அம்மலர் இருக்கின்ற வரையில் மாறாதல்லாவா! அவ்வாறே அறமும் ஒரு சிலர்க்கு நன்மைகளையும், வேறு சிலர்களுக்குத் தீமைகளையும் அளிக்கலாமா? வாழ்க்கையில் எல்லாவகை மனிதர்களுக்கும் எல்லாவகை நாட்டார்களுக்கும் வேறுபாடின்றி நன்மை பயக்கக் கூடிய அறமாக இருக்க வேண்டும். அவ்வகை

அறந்தான் நல்லறம் என்பதாகும்.

இத்தகைய அறத்தின் சிறந்த இயல்பினை நன்கு உணர்ந்தவன் இராமபிரான்; அறவழி ஒழுகுபவன்; அவன்தான் மேற்கொண்ட அறத்தினைப் பற்றித் தானே சிந்திக்கின்றான். இத்தகைய நிகழ்ச்சி ஒன்றைக் கம்பர் காட்டுகின்றார்.

இராமன் காட்டிற்குப் போவது, பரதன் நாடாள்வது என்ற ஒரு நிகழ்ச்சி உருவாகிவிட்டது,. இராமனும் காட்டிற்குப் போவது தன் கடமை என்பதை உணர்ந்தான்; அங்கு சென்று தவ வாழ்வை மேற்கொள்வது தான் சிறந்த அறம் என்றும் கொண்டான். காட்டிற்குப் படரும் அறம் தன் உள்ளத்திற்குத் துன்பத்தை அளிக்கவில்லை. அஃது பெரிதும் மகிழ்ச்சியை அளித்தது. காட்டிற்குச் செல்க என்று சொன்ன அளவில் இராமனுடைய திருமுகம் அன்றலர்ந்த செந்தாமரையைக் காட்டிலும் பன்மடங்கு பொலிந்து தோன்றியதாம். உண்மையில் உள்ளத்து மகிழ்ச்சி தானே முகத்தில் ஒளி விடும். இதனைக் கம்பர்.

"அன்றலர்ந்த செந்தாமரையினை
வென்ற தம்மா!"

என்று இராமன் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். 'அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா!' என்ற தொடரில் வாழ்வில் இன்பதுன்ப நிலைகளைச் சமமாக ஏற்கும் இராமனது ஒருநிலைப்பட்ட உள்ளத்தையும், இராமபிரான் அறத்தின்மேல் கொண்ட பற்றுதலையும், தந்தையின் கட்டளையைத் தலைமேற் கொண்டு அதன்படி நடத்திக் காட்டப் போகிறோம் என்ற உறுதிப்பாட்டையும், அறத்தின் வழி ஒழுகத் துடிக்கும்

உள்ளத் துடிப்பையும் ஒரு சேர அமைத்துக் காட்டும் கம்பரின் கவிதை அழகே அழகு.

இராமபிரானுக்குக் காட்டுக்குப் போவது அறமாக வாய்த்து விட்டது. காட்டுக்குப் புறப்பட்டார். சீதையும் உடன் சேர்ந்தாள். இலக்குவனும் பின் தொடர்ந்தான். எல்லோரும் அழகுத்தெய்வம் கொலுவிருக்கும் இடமான சித்திர கூடத்தை அடைந்தார்கள். அதன் வளமும், இயற்கை அழகும், இராமபிரான் உள்ளத்தைக் கவர்ந்தன. அங்கு தங்கி வாழ்வைத் தொடங்குவது என மூவரும் முடிவு செய்தனர். இராமபிரான் தங்குவதற்கு, பர்ணசாலை ஒன்றை அமைக்கத் தொடங்கினான் இலக்குவன், இலக்குவன் மூங்கிலை வெட்டிக் கால்களாக நாட்டினான்; தேக்கிலைகளால் நாற்புறமும் கூரை சமைத்தான்; கூரையின் மேற்பரப்பில் நாணற் புல்லை வேய்ந்தான்; சுற்றி சுவர் எழுப்பினான்; வேலி அமைத்தான்; மலர் வகைகளை அணிபெற ஆங்காங்கே வைத்து அழகு படுத்தினான்; இவ்வாறு சமைக்கப் பெற்ற பர்ணசாலை "மாயையின் சுவடு நீங்கி ஞானம் பெற்றவரின் உள்ளம் போல்" தூய்மையாக இருந்ததாம்; மேலும் வேதங்களைப் போல் பெருமை உடையதாக விளங்கியதாம்; உண்மையில் தூய்மையான திருப்பாற்கடலோ அல்லது திருமால் உறையும் வைகுந்தமோ என்றெல்லாம் சொல்லும் வண்ணம் அமைந்திருந்ததாம். இதனை,

'மாயம் நீங்கிய சிந்தனை மாமறை
தூய பாற்கடல் வைகுந்தம் சொல்லலாம்
ஆய சாலை அரும்பெறல் அன்பினன்
நேய நெஞ்சின் விரும்பி நிரம்பினான்'

- அயோத்தியா காண்டம்
சித்திரகூடப் படலம்.

என்று இராமன் கூற்றாகக் கம்பர் கூறுகிறார்.

இவ்வாறு, தூய்மையாக அமைத்த பர்ண சாலையை சீதையோடு அடைந்தார் இராமபிரான்; உட்புகுந்தார்; அதன் அழகு இலக்குவனின் உழைப்பை நன்கு எடுத்துக் காட்டிற்று. இலக்குவன் கைத்திறனைக் கண்டு மகிழ்ந்தார். இதற்கிடையில் உட்புகுந்த சீதையும், பர்ணசாலையின் அழகைக் கண்டு களித்த வண்ணம் தன் கால்களைத் தடவிக் கொண்டே அமர்ந்தாள். சீதையின் முகத்தில் களைப்புத் தென்பட்டது. இவை அனைத்தையும் நன்றாகக் கண்ணுற்றார் இராமபிரான். சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

சீதை தன் பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்த இளவரசி. இவள் பிறந்ததால் மிதிலை மாநகரமே பெருமையடைந்தது. அத்தகைய அரசியின் கால்களோ மென்மையானவை; கல்லிலும், முள்ளிலும் நடந்தறியாத பாதங்கள். அப்படியிருந்தும், இந்தக் காட்டில் துன்பப் பட்டு நடந்து வந்திருக்கிறாள். நான் மேற்கொண்ட அறம் சிறக்க வேண்டும் என்பதற்காகவே, எனக்காகவே துன்பத்தைத் தாங்கிக் கொள்கிறாள், என்றெல்லாம் சிந்திக்கிறார் இராமபிரான். மனிதர்களின் மன இயல்பை நுனித்தறிவதில் தேர்ந்தவன் கம்பன். இதனை,

'மேவு கானம் மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன

-அயோத்தியா காண்டம்
சித்திரகூடப் படலம்.

என்று இராமபிரான் தன் மன இயல்பை வரைகின்றார்.

மேலும் இராமபிரான் எண்ணுகிறார். தான் பிறந்த அரசகுலம் பெருமைக்கும் புகழுக்கும் உரிய குலம். தன் தம்பியும் தன் பெற்றோர்களால் மிக அருமையாக வளர்க்கப்பட்டவன். அரண்மனையில் பற்பலபேர் பணி செய்ய அரசகுமாரனாக வாழவேண்டியவன் தம்பி ஆனால், அவ்வாறு இல்லாமல், யாவற்றையும் துறந்து, எளியனாய், என் பின்னே வந்து துன்பப்படுகின்றானே! தான் ஒருவனாகவே நின்று தன் இரு கைகளால் அருமையான பர்ணசாலையைப் படைத்துவிட்டானே! அவனும், நான் மேற்கொண்ட அறம் சிறக்க வேண்டும் என்பதற்காகவே துன்பப்படுகின்றான்.

'தாவில் எம்பிகை
சாலை சமைத்தன'

- சித்திரகூடப் படலம்.

என்று இராமபிரான் உருகுகிறார்.

வருத்தம் மிகுதியாக, தம்பியை நோக்கி, இம்மாதிரி பர்ணசாலை கட்டுவதற்கு என்றைக்கப்பா கற்றுக் கொண்டாய்? நீ வீரத்தில் தான் வல்லவன் என்பதை நான் அறிவேன்; ஆனால் இம்மாதிரிப் பயிற்சியும் பெற்றவன் என்பதை இன்று தான் கண்டேன் அப்பா! எனக் கண்களில் நீர் சொரியக் கேட்கிறார். இதனைக் கம்பர்

'என்று சிந்தித்து, இளையவர் பார்த்து, 'இரு
குன்று போலக் குலவிய தோளினாய்!
என்று கற்றனை நீஇதுபோல்!' என்றான்
துன்று தாமரைக் கண் பனி சோர்கின்றான்!'

- அயோத்தியா காண்டம்
சித்திர கூடப் படலம்

என்று கூறுகின்றார்.

இந்த இடத்தில் அறத்தினது இயல்பை ஆழ்ந்து ஆய்வு நடத்துகிறார் இராமபிரான். தசரத மன்னன் அறமுறை தவறாது ஒழுகுபவர்; அறத்தை உயிரென மதிப்பவர்; உலகில் அறத்தின் போக்குக்கு ஒரு சிறிதும் தடை ஏற்படா வண்ணம் அவர் ஆணை பாதுகாத்து வந்தது. அறமும் தன் செயலைத் தடையின்றி அவரது ஆட்சியில் ஆற்றியது. இவ்வாறு அவன் ஆணையால் படர்ந்த நல்லறம் எனக்கு முடி சூட்டும் நாளில் தடைப்பட்டு நின்று விடுமோ என்ற நிலைமைக்குள்ளாயிற்று. தடை ஏற்படா வண்ணம் நான் என்னுடைய உரிமையையும் பலி கொடுத்தேன்; காட்டிற்குச் செல்வது என்று புறப்பட்டேன். நாட்டின் ஆட்சியைப் புறக்கணித்து, பெற்றோர் சொல்லே பெரும் பேறெனக் கொண்டு மகிழ்ச்சியுடன் வந்தேன். நான் மேற்கொண்ட காட்டுக்குப் படரும் அறம் என்னளவில் எனக்கு யாதொரு துன்பத்தையும் தரவில்லை; ஆகவே அஃது எனக்கு நல்லறமாயிற்று; ஆனால் என் மனைவி, என் தம்பி இருவருக்கும் அது பெரும் துன்பமாக முடிந்ததே! அரச வாழ்வில் வீற்றிருக்கும் அவர்களை ஆண்டி போல் காட்டிடத்தே வாழ வைத்து விட்டதே! நான் மேற்கொண்ட அறம் எனக்கு இன்பத்தையும், அவர்களுக்குத் துன்பத்தையும் தரலாமா? அவ்வாறு அமைந்தால் அந்த அறத்தில் முழு இயல்பும் கெட்டு விடுமல்லவா! காட்டிற்குப் போகும் அறத்தை அவர்களுக்காக நான் கைவிட்டு விடவும் முடியாதே! எவ்வாறாயினும் அறத்தின் இயல்பு கெட்டு விடவும் கூடாதே இதற்கு என்ன செய்வது? எனப் பலவாறு சிந்தித்தார் இராமபிரான். பின் தன் மனைவி - தன் தம்பி - இருவரின் மனப்போக்கை ஆராய்ந்தார். அவர்கள்

இருவரும் இதனால் யாதொரு துன்பமும் அடைந்ததாகத் தெரியவில்லை மாறாக இயற்கை தந்த துன்பத்தைத் தங்களுடைய மதி நுட்பத்தால் தங்களுடைய உள்ளத்திற்குள்ளேயே மக்கிப் போகுமாறு செய்து கொண்டனர் என்பதை உணர்ந்தார். மேலும், அத்துன்பங்களை வென்று இன்ப நிலையை அடைந்து, தான் மேற்கொண்ட அறத்திற்குப் பாதுகாவலாகவும் இருக்கின்றனர் என்ற உண்மையை நன்கு தெரிந்து கொண்டார் இராமபிரான். துன்பம் என்பது உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சி தானே! இதனைத் திருவள்ளுவர்

‘வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்’

-திருக்குறள்
இடுக்கண் அழியாமை பா.எ.622

என்பர். இக்குறள் வழி மனைவி - தம்பி - இவர்கள் துன்பத்தை அறிவால் வென்று இன்பநிலை எய்தியதால், அறத்திற்குக் கேடு இல்லை என்பதை அறிந்தார் இராமபிரான். உடனே தானடைந்த வருத்தமெல்லாம் மாறிவிட்டது.

இவ்வாறு இராமன் மேற்கொண்ட அறம் காட்டிற்குப் படரும் அறமாயிற்று; அஃது பிறருக்குத் துன்பம் விளைவிக்காமையின் நல்லறமாகவும் திகழ்வதாயிற்று; இதனை இராமபிரானது வாக்காக,

‘அடரும் செல்வம்
அளித்தவன் ஆணையால்,

படரும் நல்லறம்
பாலித்து'

-அயோத்தியா காண்டம்
சித்திரகூடப் படலம்.

என நல்லறத்தை வாழ்த்துகின்றார் கம்பர்.

காப்பியத்தில் சுவையாக அறத்தின் பண்பை உணர வைக்கும் கம்பர் தம் படைப்பு, கவிதைக் கலசமாக ஒளிர்வதை நாம் காணலாம்.

இன்னுயிர்த் துணைவன்

உண்மையான உயர்ந்த நட்பு வளர்பிறை போல் வளரும் என்பர். எங்கோ ஒரு நாட்டில் பிறந்த ஒருவர், வேறு ஒரு நாட்டில் தங்கி வாழும் பொழுது அங்கு வாழும் ஒருவருடன் பெரு நட்புக் கொண்டு வாழ்தலை நாம் பார்க்கிறோம். ஒரே நாட்டவர் இல்லை; ஒரே இனத்தவர் இல்லை; உறவினர் இல்லை; இருப்பினும் இவற்றையெல்லாம் கடந்து காதல் நட்போடு வாழ்கின்றனர் என்றால், அதற்கு, இருவருக்குள்ளும் இயங்கும் ஒத்த உணர்வுதான் மூலகாரணம். நீண்ட நாட்கள் ஒருவரோடு ஒருவர் பேசி, பழகி, உண்டு வாழ்ந்தார்களில்லை; ஆனால் கண்டவுடன் முதல் சந்திப்பிலேயே நட்பில் ஒன்றி விடுகின்றனர். உள்ளத்துக்கு உள்ளேயே இயங்கும் உணர்வுதான் காதல் உணர்வான நட்பினைத் தோற்றுவித்து அவர்களை ஒன்றாக்குகிறது என்று கூறுவார் திருவள்ளுவர்,

*'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'*

-திருக்குறள்
நட்பு பா. எ.5

என்பது திருக்குறள்.

இவ்வாறு, உயிர்த் துணைவர்களாக வாழ்ந்த நண்பர்கள் இருவரைத் தென்னிந்திய சரித்திரத்தில் நாம் சந்திப்போம்.

பல்லவ மன்னர்கள் பேரும் புகழும் பெற்று அரசாண்ட காலம். கி.பி. 630 - 668 வரை பல்லவ மன்னனான முதலாம் நரசிம்மவர்மன் காஞ்சி மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு நீதியோடு அரசாண்டான். பல்லவர்தம் பெருமையைக் கண்டு பொறாமையுற்ற வடநாட்டு சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசி முன்பு ஒருகால் படையெடுத்து வந்து நரசிம்மனின் தந்தையாகிய மகேந்திரவர்மனிடம் தோற்றுச் சென்றான். சில நாட்கள் கழித்து, இரண்டாம் புலிகேசி நரசிம்மன் மேல் படையெடுத்து வந்தான். போருக்கு ஆயத்தமானான் நரசிம்மன். இந்த நிலையில், இலங்கையில் பட்டத்திற்கு உரிய வாரிசான மானவன்மனை ஏமாற்றி, அட்டதத்தன் என்பவன், அரசாட்சியைப் பறித்துக் கொண்டான். பட்டத்தை இழந்த மானவன்மன், நரசிம்மன் பால் அடைக்கலமாக வந்து சேர்ந்தான். போருக்குச் செல்ல இருக்கும் நரசிம்மன், மானவன்மனை வரவேற்றான். பின் அவன் கதையைக் கேட்டவுடன், அவன்பால் ஒரு பரிவுணர்ச்சி நரசிம்மனுக்கு வந்தது. அதுமட்டுமல்ல, ஏதோ ஒருவகை உணர்ச்சிகளால் உந்தப்பட்ட நட்பு இருவரையும் பிணைத்து விட்டது. இருவரும் உயிர் நட்பினராக

அன்று முதல் ஆயினர். பின் நரசிம்மன் போரில் இரண்டாம் புலிகேசியை வென்றான்; பின் இலங்கைக்குப் படைகளை அனுப்பி அட்டதத்தனை வென்று, மானவன்மனுக்கு முடிசூட்டி வைத்தான். இதனை, “இலங்கையில் பல்லவன் பெற்ற வெற்றி, இராமன் இலங்கையில் பெற்ற வெற்றியைப் போன்றது” என்று தஞ்சை மாவட்டத்திலுள்ள காசக்குடிப் பட்டயம் நமக்குத் தெரிவிக்கின்றது.

நட்பிற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர், நட்பு என்பது, முகமலர்ச்சியாகப் பேசி, அறிவால் உந்தப்பட்டு அறிவும் அறிவும் கலப்பது நட்பாகாது; நட்புக் கொண்ட இருவர்களின் இதயமும் இதயமும் ஒன்றாகக் கலக்க வேண்டும். அங்குதான் உயிரனைய காதல் நட்பு தோன்றுகின்றன என்று கூறுவார்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்(து)
அகநக நட்பது நட்பு.

-திருக்குறள்
நட்பு பா.எ. 6

என்பது குறள்.

இத்திருக்குறளுக்கு, எடுத்துக்காட்டாக, இராமகாதையில், கம்பர் காட்டக் காண்போம்.

சீதையை இராவணன் கவர்ந்து சென்றுவிட்டான். தங்களையே மறந்து துயருற்ற இராம இலக்குமணர்கள் சீதையைத் தேடிக் கொண்டு வருகிறார்கள். வானர அரசன் சுக்ரீவனைத் துணையாக்கிக் கொள்ளலாம் என்றும் எண்ணினார்கள். இந்த எண்ணத்தோடு ருசியமுக பர்வதம் நோக்கி வருகிறார்கள். அம்மலையில் ஏறி வருபவர்களை, அனுமன் தன்னுடைய அறிவு

நுட்பத்தால் அளந்து, அவர்களை அணுகி உண்மைகளைத் தெரிந்து கொள்கின்றான். பின், அனுமன் சுக்ரீவனிடம் சென்று இராம இலக்குமணர்களைப் பற்றிச் சொல்லி, இவர்கள் இருக்கும் இடத்திற்கு சுக்ரீவனை அழைத்துக் கொண்டு வருகிறான். பின் அறிமுகப்படுத்தி வைக்கிறான்.

முதல் சந்திப்பில், இராமனைப் பார்க்கிறான் சுக்ரீவன். கண்டவுடன் ஏதோ ஒரு புதிய உணர்வு உள்ளத்துக்குள்ளேயே எழுகிறது. முதலில் அவர்கள் தம் அழகில் ஈடுபடுகிறான். மக்களால் செய்யப்படும் நல்வினைகளின் பயன்களெல்லாம் ஒன்று திரண்டு மானுடப்பிறவி எடுத்து இங்கு எழுந்தருளி இருக்கிறதோ என்று எண்ணுகிறான். அடுத்து, தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய முதற் கடவுள் உருவம் மாறி இங்கு வந்திருக்கிறதோ என்றும் எண்ணுகிறான். இந்த மனித வடிவை என்னவென்று சொல்வேன்.

நோக்கினான் நெடிது நின்றான்
நொடிவரும் கமலத் தண்ணல்
ஆக்கிய உலக மெல்லாம்
அன்றுதொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த தெல்லாம்
குவிந்திரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று
வீரராய் விளைந்த தென்பான்.

தேறினன் அமரர்க் கெல்லாம்
தேவராம் தேவ ரென்றே
மாறியிப் பிறப்பில் வந்தார்
மானுடராகி மன்னோ!

ஆறுகொள் சடிலத் தானும்
அயனும்மற் றிவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்றது அன்றே!

- கிட்கிந்தா காண்டம்
நட்புக்கோள் படலம்.

இவ்வாறு பலப்பல எண்ணிய சுக்ரீவனுடைய உள்ளம் இராமன் பால் செல்லுகிறது. இராமனுடைய உள்ளமும், ஏதோ ஒருவகை உணர்வு தோன்ற சுக்ரீவனைத் தழுவிக் கொள்கிறான். இருவர் நெஞ்சிலும் நட்பு மலர்கின்றது. உண்மையான நட்பினர் ஆகின்றனர். இவர்களுடைய நட்பின் ஆழத்தைக் கம்பர், முற்பிறப்பிலே ஈட்டிய நல்வினைத் தவமும், இப்பிறப்பிலே கூட்டிய பெருமுயற்சியும் ஒன்று சேர்ந்த நிலையே, இவர்கள் தம் நட்பு எனக் கூறுகின்றார்.

"முன்னாள் ஈட்டிய தவமும்
பின்னர் முயற்சியும் இயைந்த(து) ஒத்தார்!"

- கிட்கிந்தா காண்டம்
நட்புக்கோள் படலம்.

என்பது பாடல்.

நட்பால் பிணைந்த இராமபிரானும் சுக்ரீவனும் ஒருவருக்கொருவர் மனங்கலந்து பேசினர், சுக்ரீவன், தான் வாலியால் பட்ட துன்பங்களை எல்லாம் எடுத்துக் கூறி, இராமன் பால் சரணடைகிறான்.

இக்குன்று

அரண்உடைத் தாகி உய்ந்தேன்
ஆருயிர் துறக்க லுற்றேன்
சரணுனைப் புகுந்தேன் என்னைத்
தாங்குதல் தரும மென்றான்!

என்னைக் காப்பது உன்னுடைய தருமம் என்று சுக்ரீவன் கூறுகிறான். உடனே இராமன் அவனுடைய துன்பத்தை நீக்குவதாகச் சொல்லி, தான் அவன்பால் கொண்ட நட்பை விளக்கி எவ்வளவு உயர்வாகக் கூறமுடியுமோ, அவ்வளவு உயர்வாகக் கூறுகிறான்.

நாம் வாழுகின்ற இந்த மண்ணுலகத்திலும் தேவர்கள் வாழுகின்ற அந்த விண்ணுலகத்திலும், உனக்குத் துன்பம் தந்து உன்னை வருத்திய பகைவர்கள், எனக்கும் பகைவர்கள் ஆவார்கள். ஒருசிலர் தனிப்பட்ட பண்பால் தீய தன்மையைப் பெற்றிருந்தாலும், இங்கு அவர்கள் உனக்கு நண்பர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் எனக்கும் நண்பர்களேயாவார்கள், உன்னைச் சேர்ந்த உன் உறவினர்கள் எனக்கும் உறவினர்களேயாவார்கள். என் அன்பிற்குப் பாத்திரமாக வாழ்பவர்கள் உன் அன்பிற்குப் பாத்திரமாகவே வாழ்வார்கள். ஆகவே இன்றுமுதல் என் இனிய உயிர்த் துணைவன் ஆவாய் - என்று உணர்ச்சி ததும்ப இராமபிரான் சுக்ரீவனிடம் கூறி அணைத்துக் கொள்கிறான்.

"மற்றினி உரைப்ப தென்னே
வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்;
தீயரே எனினும் உன்னோடு

உற்றவர் எனக்கும் உற்றார்;
உன்கிளை எனது, என் காதல்
சுற்றம், உன் சுற்றம்; நீயென்
இன்னுயிர்த் துணைவன் என்றான்!"

- கிட்கிந்தா காண்டம்
நட்புக்கோள் படலம்.

இங்கு, இராமன் உள்ளமும் சுக்ரீவன் உள்ளமும் ஒன்றாகக் கலந்து நிற்கக் காண்கிறோம். இவ்வாறு கலந்த உள்ளத்தவர்கள்தான் உயிர்த் துணைவர்கள் ஆகின்றனர் என்று படைத்துக் காட்டுகின்றார் கம்பர் பெருமான்.

வாழ்க உலகம்

உலகில், பெரியவர்கள், சிறுவர்களை நோக்கி நீடு வாழ்க என்று வாழ்த்துவது இயற்கை. ஆனால், உலகம் முழுவதையும் வாழ்க என்று வாழ்த்த வேண்டுமானால், வாழ்த்தும் தகுதி படைத்தவர்கள் யார் என்ற கேள்வி எழுகிறதல்லவா; உலக தத்துவத்தை உணர்ந்த ஒழுக்க சீலர்களே அத்தகுதி படைத்தவர்கள் ஆவார்கள். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற குறிக்கோளை உடைய சான்றோர்களே அத்தகுதி படைத்தவர்கள் ஆவார்கள். அத்தகைய பண்புடையாளர்கள் உலக முழுமையிலும் பரவி வருகின்ற அறியாமைகளையும், கொடுமைகளையும் கண்டு மனமுருகிப் போவார்கள்; வெறும் அறிவு முனையில் உருவாகும் அரசியல், பொருளாதாரக் திட்டங்களைக் கண்டு மனம் வருந்துவார்கள்; கட்சிப் பாகுபாட்டாலும், பொறாமைக் குணத்தாலும் ஒருவரோடு ஒருவர் அடித்துக் கொண்டு உலகை அழிவுப் பாதையில் திருப்பும் அரசியலைக்

கண்டு கவலை கொள்வார்கள்.

'பாழான அரசியலே
பார்மீது பரவிவந்தால்
வாழாமல் உயிர்மடியும்
வல்லிதிரு மணவாளா'

என்றும்

'கற்றவர்கள் எனும்பெயரால்
காசினியில் அரசியலார்
செற்றமிது புலிகரடி
சிங்கமெனத் திரிகின்றார்'

என்றும்

'கல்வியிலும் வாழ்க்கையிலும்
கடைப்பட்ட தன்னலமே
மல்குநெறி பரவிவரின்
மாநிலமே கொலைக்களமாம்'

என்றும் கூறும் தமிழ் அறிஞர் திரு.வி.க. அவர்களின் கூற்றுப்படி. உலகக் கேட்டிற்காக மனம் வெந்து தொண்டு செய்ய முற்படுவார்கள். இவ்வாறெல்லாம் மனமுருகித் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்யும் சான்றோர்களே தங்கள் தூய உள்ளத்தால் 'வாழ்க உலகம்' என்று உலகை வாழ்த்தலாம். ஆனால் வாழ்க்கையில் சில சூழ்நிலைகளில் எளிய மனிதன் கூட உலகத்தை வாழ்த்தும்படியான அவசியம் நேர்ந்து விடுகின்றது. உலகத்தோரோல் விழுமியது என்று கொண்டாடப்- பெற்ற ஒழுக்கமுடைய ஒருவருக்குச் சோதனை ஏற்பட்டு, பின் அவற்றினின்றும்அவர் தப்பி வெற்றி பெற்று சிறப்படைவாரானால், அக்காலை எளிய

மனிதன் கூட முன்வந்து அவர் வெற்றி உலகிற்குத் தேவை என்பதனால் உலகை வாழ்த்துதலை நாம் காணலாம்.

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் ஆகாகான் மாளிகையில் சிறைப்பட்டிருந்தார். அவர் அந்நியரை எதிர்த்து உண்ணாவிரதமிருந்தார். காந்தியடிகள் தாம் மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் எல்லையை இருபத்தொரு நாட்கள் என வரம்பு படுத்தியிருந்தார். உண்ணாவிரதம் என்று கேட்டவுடன் உலகம் திடுக்கிட்டது; நாட்கள் சென்றன; கவலை அதிகரித்தது; தள்ளாத வயதில் உண்ணாவிரதமா என்று மக்கள் எண்ணினார்கள். காந்தியடிகளின் உயிர் உலகத்திற்கே கிடைத்தற்கரிய செல்வமல்லவா! என்று மக்கள் ஏங்கினார்கள்; குழப்பம் அடைந்தார்கள். துக்க செய்தி வரக்கூடாதே என்று தவித்தார்கள்; மக்களின் எண்ணமெல்லாம் ஆன்ம வாழ்வின் உருவமாக, நற்பண்புகளின் வடிவமாகத் திகழும் காந்தியடிகளைப் பற்றியே இருந்தன. இருபத்தொரு நாட்களும் முடிந்தன. மறுநாள் அடிகள் பழரசம் அருந்தினார். மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! பாரதத்தின் தனிப்பெரும் தலைவரை நெஞ்சார வாழ்த்தினார்கள் மக்கள்; இந்தியாவுக்கு இனி அழிவில்லை அழிவு நிலையில் இருந்த இந்தியா காந்தியடிகளின் உண்ணாவிரத முடிப்பால் பாதுகாக்கப்பட்டது என்று கூறி வாழ்த்தினார்கள். மனித சமுதாயத்தின் வளர்ச்சியோடு ஒன்றியவர் அல்லவா காந்தியடிகள்! ஆகவே தான் மனித சமுதாயத்தின் பண்பாடுகளின் உருவமாக விளங்கும் காந்தியடிகளை, இந்தியாவின் ஏழை மனிதன் முதல் அனைத்து மனிதர்களும் வாழ்கவென வாழ்த்தினார்கள்.

இவ்வாறு வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளின் உண்மைகளைப் பொதுவாக நுனித்து அறிந்தவர்கள் கவிஞர்கள்; அவர்களும் சமுதாயத்தில் மக்களின் மனநிலையை உணர்ந்தவர்கள்; அவர்களும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளின் இதயத்தைக் கண்டவர்கள்; மக்கள் சமுதாயம் நன்கு வளரவேண்டும் என்ற பேரவாக் கொண்டவர்கள்; ஆகவேதான் தங்கள் அனுபவ உண்மைகளை வழிகாட்டியாக கவிதைகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்; அழகுணர்ச்சியோடும் காலத்திற்குப் பொருந்துமாறும் வடித்துத் தந்தார்கள். இந்த வகையில் கவிஞர் பெருமக்களில் முதன்மையில் நிற்பவர் தான் நம் கவியரசர் கம்பர் ஆவார்.

கம்பன் தம் காப்பியத்தில், நம்மைப் போல் உலகை வாழ்த்த வேண்டிய சூழ்நிலை ஒன்று உருவாகின்றது. அதனை அழகுறக் கையாள்கிறான் கம்பன். அனுமன் அசோக வனத்தில் சீதையைக் காணுகின்ற சூழ்நிலை, சீதையின் தூய்மையைக் கண்ட அனுமன் தன்னை மறந்து வாழ்த்தும் ஒரு பகுதியை கம்பர் சித்தரிக்கின்றார்.

சீதையைத் தேடிப் புறப்பட்ட பின் அனுமன், ஒன்று கண்டுபிடிப்பது அல்லது அழிந்து படுவது என்ற திட உறுதியோடு புறப்பட்டான். தேடி அலைந்தான். முடிவில் அசோக வனத்திடை கருநிறமமைந்த கட்டழகனான இராமனுக்கு ஏற்ற மனைவியான சீதையைக் கண்ணுற்றான். இந்த இடத்தில் கம்பன் கையாண்ட உவமை போற்றத்தக்தொன்றாகும்.

வானகத்தில் மேகக்கூட்டங்களை நாம் பார்க்கலாம். அவை கருநிறத்தோடு கருமையாகக்

காட்சியளிக்கும். ஒரு சமயம் பூதாகரமாய் அரக்கனைப் போன்று தோன்றும்; மறுவினாடி பெரிய பெரிய மலைகள் பெயர்ந்து விழுவது போல் மாறிமாறித் தோன்றும். குகைபோல் தோற்றமளிக்கும்; குகையில் யானைகளைப் போன்று வடிவங்கள் தோன்றும். இதுபோல வடிவ பேதங்களை உடைய அரக்கியர் கூட்டம் கரிய நிறத்தோடு, அங்குமிங்கும் உலவிக் கொண்டிருந்தார்களாம். மேகத்தின் ஊடே மின்னல் ஒளிவிடும் அல்லவா! அஃதே போன்று அவ்வரக்கியர்கள் ஊடே சீதை ஒளிவிட்டாளாம். மேகத்திற்கு அரக்கியர்களையும், ஊடே ஒளிவிடும் மின்னலுக்குச் சீதையையும் ஒப்பிட்டுக் கம்பன் உவமை கூறுகின்றான். இதனை -

'விரிமழைக் குலங்கிழித்து
ஒளிரும் மின்னெனக்
கருநிறத்து அரக்கியர்
குழுவின் கண்டனன்!
குருநிறத் தொருதனிக்
கொண்ட லாமெனாக்
கருநிறத்து அழகனுக்கு
அமைந்த காந்தயை!'

-சுந்தரகாண்டம்
காட்சிப்படலம்

என்று கூறுகின்றார்.

சீதையைக் கண்ட அனுமன் கவலை ஒழிந்தான். மின்னல் பளிச்சென்று அடிப்பதனால் வானகத்தே பரவி நிற்கும் கெடுதல்கள் மாற்றப்படுவது போல, சீதை என்ற மின்னல் ஒளிவிட அனுமன் மனக்கவலை மாற்றப்பட்டது. அனுமன் தன்னை மறந்த மகிழ்ச்சியில்

மூழ்கி விட்டான்.

'ஆடினன் பாடினன்
ஆண்டுமீண்டும் பாய்ந்து
ஓடினன் உலாவினன்
உவகைத் தேனுண்டான்!'

- சுந்தர காண்டம்
காட்சிப்படலம்

என்று அனுமனின் மெய்ப்பாடுகளைக் கூறுகின்றார் கம்பர்.

சீதை அசோக வனத்தில் தவமகளாய் வீற்றிருந்தாள்; மெலிந்த உடல் ஆனால் முகத்தில் கற்பின் ஒளிச்சுடர் வீசுகின்றது; இரத்தினங்கள் அழுக்குகளால் மூடப்பட்டிருக்கலாம்; இருந்தாலும் இரத்தினத்தின் ஒளி உள்ளே வீசிக் கொண்டிருக்குமல்லவா! அதுபோல் சீதை கற்பினுக்கு அணியாய் ஒளி வீசிக் கொண்டிருக்கிறாள். சீதையின் உண்மை நிலையைக் கண்ணாரக் கண்டான் அனுமன்; கற்பொழுக்கத்தின் பேராற்றலைக் கண்டான்; மிகச்சிறப்பாக, உயிராகக் கருதி தமிழ்நாட்டாரால் போற்றப்படும், பத்தினித் தன்மைக்கு, கற்பின் நெறிக்குப் பங்கமில்லை, எந்தவிதமான மாசும் ஏற்படவில்லை - என்ற பேருண்மையையும் உணர்ந்தான் அனுமன். சீதையின் கற்பினுக்குப் பழுது ஏற்பட்டால் இராகவன் வெகுண்டு எழுவான்; அந்தச் சினத்தீயில் இவ்வுலகமானது அழிந்துவிடுமே எனப் பயந்தேன்; உண்மையில் அவ்வாறு இல்லை! இனிப்பயமில்லை. இவ்வுலகமானது பெரிய

அழிவினின்றும் தப்பித்துக் கொண்டது. அறமும் பிழைத்தது. இனி அறத்திற்கும் அழிவே இல்லை!

“மாசுண்ட மணியனாள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக்கு ஈறுண்டோ;

தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர் அறமும் ஈறு இன்றால்!”

-சுந்தர காண்டம்
காட்சிப்படலம்

என்று அனுமன் தனக்குள் கூறிக் கொள்கிறான்.

உலகத்தின் தலைவிதி சீதையின் கற்போடு பிணைக்கப்பட்டிருந்தது. கற்புக்கு மாசு ஏற்படவில்லை; கற்பின் வலிமைக்குக் குறைவே இல்லை, ஆதலால் உலகமே நீ வாழ்க! என்று அனுமன் வாழ்த்துவதாகக் கம்பன் கூறுகின்றான்.

சீதையை ‘வாழ்க’ என்று கூறுவதைக் காட்டிலும், இராமபிரான் ‘வாழ்க’ என்று கூறுவதைக் காட்டிலும் ‘உலகம் வாழ்க’ என்று சொல்வதில்தான், வாழிய உலகம் என்று வாழ்த்தியதில்தான் காப்பியப் போக்கில் கம்பன் உலக மகா கவிஞர்களின் முடிமன்னனாகத் திகழ்கிறான் என்பதில் ஐயமே இல்லை!

கேழிலாள் நிறையிறை
கீண்ட தாமெனின்
ஆழியான் முனிவெனும்
ஆழி மீக்கொள
ஊழியின் இறுதிவந்து
உறுமென்று எண்ணினேன்
'வாழிய உலகு' இனி
வரம்பில் நாளெலாம்

- சுந்தரகாண்டம்
காட்சிப்படலம்

ஒருக்காலும், தீவினை அறத்தை வெல்லாது என்ற உறுதிப்பாட்டோடு உலகை வாழ்த்துகிறான் அனுமன். வாழ்க உலகம்!

தருமத்தின் தலைவிதி

தருமம் தலைகாக்கும் என்பர் ஆன்றோர். வாழ்க்கையில் மனிதர்களாகப் பிறந்தவர்கள் தங்களால் இயன்ற அளவு அறத்தைச் செய்ய வேண்டும்; அறநெறிகளைக் கைக்கொள்ள வேண்டும். உண்மையில் அறத்தைப் போற்றுவபர்களுக்கு, அறமானது செல்வத்தைக் கொடுக்கின்றது; அழியாப் புகழைக் கொடுக்கின்றது; நன்மைகளை நாளும் அளிக்கின்றது; இவ்வாறு அறத்தை மேற்கொள்ள உதவும் வாழ்க்கை இல்லற வாழ்க்கையாகும். இல்லற வாழ்க்கையில், ஆணுக்குப் பெண் துணையாகவும், பெண்ணுக்கு ஆண் துணையாகவும் இருந்து அறநெறியைப் பாதுகாப்பது மிகவும் எளிதாக அமையும். இல்வாழ்க்கையில் கணவன் அறத்தின் கூறுகளில் சிலவற்றைக் கடைப்பிடிக்க முற்படலாம்; அதனையே குறிக்கோளாகக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்தலாம்; அவ்வாறு நடத்தும்பொழுது

உடனுறையும் மனைவி அவன் கொண்ட அறத்திற்கு உறுதுணையாக இருந்து அறம் வெற்றிபெற உதவ வேண்டும். காலத்தால், கணவன் கொண்ட அறத்திற்குத் துன்பங்கள் நேரிடலாம்; நலங்கள் பாதிக்கப்படலாம்; அந்தந்த கால கட்டங்களில் வாழ்க்கைத் துணையான பெண் தன் நலங்களைக் காணிக்கையாக்கி, துன்பத்தை உறுதியால் ஏற்று பொறுமையைக் கைக்கொண்டு, கணவன் குறிக்கோளுக்கு ஊறு ஏற்படா வண்ணம் சோர்வின்றி உதவ முன்னிற்க வேண்டும். இவ்வாறு எப்பெண் தன் கற்பு நெறியையும், சொல்லுறுதியையும் காத்துக் கொண்டு, தான் கொண்ட கணவனைப் போற்றி, அவன் ஏற்ற அறத்திற்கும் துணை நின்று கடமை ஆற்றுகிறாளோ அப்பெண்தான் உண்மையான பெண்மையோடு கூடிய வாழ்க்கைத் துணையாவாள் எனத் திருவள்ளுவர்

'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

-திருக்குறள்
பா.எண். 6
வாழ்க்கைத் துணைநலம்

என்று கூறுகின்றார்.

இம்மாதிரி வாழ்க்கைத் துணை நலத்திற்கு எடுத்துக் காட்டாக மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை சரித்திரத்திலிருந்து நிகழ்ச்சி ஒன்றைப் பார்ப்போம்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் ஜோகானிஸ்பர்க் என்ற நகரில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவர், அங்கு வசிக்கும் மக்களுக்கு நல்ல பல தொண்டுகளைச் செய்து கொண்டிருந்த காலம். அவருக்குத் துணையாக கஸ்தூரிபாயும் இயன்ற

உதவியை ஆற்றிக் கொண்டிருந்தார். இந்த நிலையில் கஸ்தூரிபாய்க்கு உடல்நிலை சரியில்லை. இரத்தம் தொடர்பான நோய் தாக்கிற்று. உடனே, தளர்ந்த மனைவியை டர்பான் நகருக்கு அழைத்துச் சென்று மருத்துவ விடுதியில் வைத்துப் பார்த்தார். நோய் குறைந்தபாடில்லை! இருப்பினும், மருத்துவர், ஒரு புது மருந்தைக் கொடுத்து, இம்மருந்தை ஆட்டிறைச்சியின் ரசத்தோடு சேர்த்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மூன்று நாட்கள் அருந்தினால் கடுமை குறைந்து குணம் நோக்கிச் செல்லும் என்று கூறினார். இஃது, காந்தியடிகளின் 'புலால் அருந்தாமை' - என்ற சைவ அறத்திற்கு முற்றிலும் விரோதமல்லவா! என்ன செய்வது! மருத்துவரிடம் இதை மாற்றி, வேறு ஏதாவது செய்யுங்கள் என்று மன்றாடிக் கேட்டார் மகாத்மா. ஆனால் மருத்துவர் நான் சொன்னபடி செய்யாவிட்டால், இவ்விடுதியை விட்டு வேறு எங்காவது போய் மருத்துவம் பாருங்கள் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

காந்தியடிகள் கஸ்தூரிபாயை நோக்கினார். அப்பார்வையைப் புரிந்து கொண்ட கஸ்தூரிபாய் காந்தி ஒரு நிமிடம் ஆழ்ந்து சிந்தித்தார். கணவருடைய அறம் புலால் அருந்தக் கூடாது; ஆப்பிரிக்க நாட்டு மக்களின் விடுதலைக்குத் தன் நாயகன் மேற்கொண்ட அறக் கூறுகளுள் புலால் அருந்தாமையும் ஒன்றாகும். நான் புலால் அருந்தினால், அதனால் தன் கணவன் வருந்தப் பலகோடி மக்களின் விடுதலைக்குக் கணவன் செய்யும் தொண்டு பாதிக்கப்படலாம்! ஆகவே அவர் மேற்கொண்ட அறத்திற்குக் கேடு வாரா வண்ணம் உறுதியாகத் துணை நிற்கத் துணிந்தார் கஸ்தூரிபாய்! உடனே காந்தியடிகளை நோக்கி "நான் புலால்

அருந்தவில்லை. அருந்துவதைவிடப் பெரு மகிழ்ச்சியோடு உங்கள் மடியிலே உயிரை விடத் தயாராக இருக்கிறேன். என்னை உடனே இவ்விடத்தை விட்டு அகற்றுங்கள் வேறிடம் செல்வோம்" - என்று கூறினார். இதைக் கேட்ட காந்தியடிகளுடைய உள்ளம் பூரித்தது; மகிழ்ச்சியின் எல்லையை அடைந்தது. மனைவியின் உறுதியையும், துணைநிற்கும் மாண்பையும் நினைத்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தார் அடிகள்.

இவ்வாறு தன்னுடைய உயிர் போகும் நிலையிலும் கூடத் தன் கணவன் மேற்கொண்ட அறத்திற்குக் கேடு வாரா வண்ணம் தன் நலத்தைக் காணிக்கையாக்கினார் கஸ்தூரிபாய் அவர்கள்; காலத்தால் ஏற்பட்ட துன்பத்தையும் பொறுமையோடு ஏற்றார். தன் கணவன் கொண்ட அறம் மாசுறா வண்ணம் அறத்தையும் காத்து, கணவனையும் போற்றினார். உண்மையில் வாழ்க்கைத் துணை நலத்திற்கு எடுத்துக்காட்டாக நின்று அழியாப் புகழையும் பெற்றார்கள் கஸ்தூரிபாய் காந்தி அவர்கள்.

இம்மாதிரி இல்வாழ்க்கையில் அறம் சிறக்க வேண்டும்; அதற்குக் கணவனும் மனைவியும் கருத்தொருமித்துச் செயலாற்ற வேண்டும். கணவன் மேற்கொண்ட அறத்தினுக்கு மனைவி துணையாக நின்று வெற்றி பெறச் செய்ய வேண்டும். இக்கருத்தினை, கம்பர் தாம் பாடிய காப்பியத்தின் மூலம் அழகுற வடித்துத் தந்த பகுதியினை நாம் சுவைக்கலாம்.

அனுமன் அசோக வனத்தினை அடைந்தான்; அங்கு சீதையைக் கண்டான்; துன்பத்தில் மூழ்கியிருக்கும் சீதையை நோக்கி தன்னை

அறிமுகப்படுத்திக் கொள்கிறான்; அடையாளமாக, திரு ஆழியாகிய முத்திரை மோதிரத்தை சீதையிடம் கொடுக்கிறான். மோதிரத்தைப் பெற்ற சீதை தன்னை மறந்தாள்; கண்களிலே ஒத்திக் கொள்கின்றாள்; மார்பிலே வைத்து அணைத்துக் கொள்கின்றாள்; தலையின் மேலே வைத்து வணங்குகின்றாள்; அவளுடைய தடந்தோள்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் பூரிக்கின்றன; எல்லையிலா மகிழ்ச்சியோடு அனுமனைப் பார்த்து சீதை பேசுகிறாள்:-

'இந்த மூவுலகையும் படைத்த முதல்வனுக்கும் முதல்வனாகிய இராமபிரானுடைய தூதுவனே! உண்மையில் நீ தூதுவன் மட்டுமல்ல; எனக்குத் தந்தையும் தாயும் ஆகிவிட்டாய்! நீ கருணைக்குப் பிறப்பிடமான அருளுருவனுமாவாய்! நீ மோதிரத்தை மட்டுமா எனக்கு அளித்தாய் இல்லை! இம்மையிலும் மறுமையிலும் கிடைத்தற்கரிய இன்பத்தை அல்லவா தந்தாய்! அது மட்டுமா! என் உயிரையே எனக்கு வழங்கிய வள்ளல் நீ! என்றெல்லாம் கூறுகின்றாள். இக்கருத்தினை

மும்மை ஆம் உலகம் தந்த
முதல்வர்க்கும் முதல்வன் தூதாய்!
செம்மையால் உயிர்தந் தாய்க்குச்
செயல்என்னால் ஆவ துண்டோ!
அம்மையாய் அப்ப னாய
அத்தனே அருளின் வாழ்வே!
இம்மையே மறுமை தானும்
நல்கினை இசையொ டென்றாள்

- சுந்தர காண்டம்
உருக்காட்டுப் படலம்

என்ற இப்பாடலில் காணலாம்.

ஒருவாறு, சீதையின் மகிழ்ச்சிப் பெருக்கு வடிந்தது; அமைதி திரும்பிற்று; இராம இலக்குமணர்களின் நலம் பற்றி அனுமன்பால் கேட்கிறாள். அதற்கு அனுமன் சீதையைப் பரிந்தபின் இராமன் பட்ட துயர்களைக் கூறுகின்றான். எதிலும் சிந்தை செல்லாது பித்துப் படித்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் இராமன் என்றான். இதனைக் கேட்ட சீதையின் மனம் உருகிற்று; ஏங்கினாள். இவ்வருத்தத்தைக் கண்ட அனுமன், சீதையை நோக்கி, அம்மையே என் தோள்களில் தாங்கள் வீற்றிருந்தால், இக்கணமே இராமன் முன் கொண்டுபோய் சேர்த்துவிடுகிறேன். ஏறிடுவீர் என்று அடிபணிந்து கூறினான். அதனைக் கேட்ட சீதை, அனுமா; நீ வீரன், ஆண்மை மிக்கவன்; நின்னுடைய ஆற்றல் அளவிடற்கரியது; சொல்லியபடி செய்து முடிக்கும் செயல்திறன் மிக்கவன். அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால் இவ்வாறு செல்லும் வழி உயர்ந்த வழி அன்று; வெற்றிக்கு வழி அன்று; நீதி வழி அன்று; எல்லையற்ற இந்த இலங்கையோடு மற்ற உலகங்களையும் ஒரு நொடியில், கற்புடைய நானே என்னுடைய ஆற்றல் நிறைந்த சொல்லினால் சுட்டு எரித்து விடுவேன்; ஆனால் அது தூயவனான இராகவன் தன் வில்லின் ஆற்றலுக்கு மாசாகும். ஆகவே அதனை விடுத்தேன்.

அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லை நீத்தஉல கங்கள்யா வும் என்
சொல்லி னால்சுடு வேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்.

-சுந்தர காண்டம்
சூடாமணிப்படலம்.

ஆகவே நீ உண்மையில் உன் எண்ணத்தை விட்டு

விடுவாயாக! ஆனால் எனக்காக ஒன்று மட்டும் அவரிடம் போய்ச் சொல்வாயாக! நீதி வடிவினனாகிய அனுமே! வாழ்க்கையில் நான் பெருந்துன்பங்களை அடைந்துவிட்டேன். வாழ்க்கை எனக்குக் கசந்துவிட்டது. இராகவன் வந்து தன் வீரத்தைக் காட்டிப் பகைவர்களை அழித்து என்னை மீட்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக இந்த உயிரைச் சுமந்து கொண்டிருக்கிறேன். இருப்பினும் இதற்கும் ஓர் எல்லை வேண்டுமல்லவா! இன்னும் ஒரு திங்கள் இராமன் வருகையை எதிர் நோக்குகிறேன்; அவர் வர வேண்டும் இல்லையெனில் நான் என் உயிரை விட்டு விடுவேன்; மன்னனாகிய இராமன் மேல் ஆணைவிட்டுச் சொல்லுகிறேன். இதை எடுத்து அவர் பால் கூறுவாயாக! என்று கூறுகிறாள் சீதை.

'இன்னும் ஈண்டுஒரு திங்கள் இருப்பன்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது, நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின்றி லேன்அந்த
மன்னன் ஆணை, இதனை மனக்கொள்நீ!

-சுந்தரகாண்டம்

இதனைக் கேட்ட அனுமன் திடுக்கிட்டான்; உலகில், அறம் அல்லாதனவற்றை நீக்கி, அறத்தைக் காக்கத்தானே இராமன் பிறந்திருக்கிறான்; சீதை உயிரை விட்டாளேயானால், இராமனும் வருந்தி உயிரை விட்டுவிடுவான். தருமத்தைக் காப்பது இராமர்தானே பிறகு எங்ஙனம் தருமம் காக்கப்படும்? ஆகவே, தருமம் பிழைக்க சீதை உயிர் வாழ வேண்டும் என்று எண்ணினான் அனுமன். சீதையை நோக்கிப் பேசுகிறான் தாயே! தங்களுடைய துன்பம் எனக்கு மிக நன்றாகப் புரிகின்றது. கணவனைப் பிரிந்து,

உறவினர்களை விட்டு, துறவுக் கோலத்தோடு தவமகளாய் தாங்கள் எத்தனை காலந்தான் வாழ்வது? இதனைத் தெரிந்த நான் ஒன்றைச் சொல்வேன்.

தங்களை இராவணன் கவர்ந்து சென்றான் என்று கேட்டவுடனே, இராமன் சினந்தான்; இந்த மூவுலகையும் அழித்து விடுகிறேன் என்று புறப்பட்டான்; ஆனால் இராமபிரானுக்கு ஒரு சிந்தனை பிறந்தது. அவ்வாறு அழிப்பது முறையன்று, நம்முடைய வீரத்தை, வில்லின் ஆற்றலைக் காட்டிப் பகைவரை வென்று, தேவியை மீட்க வேண்டும். அதுவே சரியான தருமம்! அதுவே சரியான நீதி! என்று எண்ணி, அவ்வாறே போரிடுவதாகச் சபதம் செய்துள்ளான் இராமன். தாங்கள் இறந்தால் அறத்தின் நாயகன் செய்த சபதம் என்னாவது? இராகவன் சொன்ன சொல் பொய்க்கலாமோ? இராகவனை எதிர் நோக்கியிருக்கும் தருமத்தின் தலைவிதி என்னாவது? சற்றே சிந்தியுங்கள் தாயே. கொண்ட கணவன் தான் கொண்ட தருமத்திற்குத் துணைவி என்பவள் உறுதுணையாக நிற்காவிட்டால், வாழும் குலத்திற்குப் பழி வந்து சேருமல்லவா. அன்று இராமபிரான் அதருமத்தை அழித்து தருமத்தை நிலைநாட்டுவேன் என்று கூறிய வாக்கு உண்மையாக வேண்டுமானால், தருமத்தின் தலைவிதி காக்கப்பட வேண்டுமானால், தாயே தாங்கள் உயிர் வாழ வேண்டும். துன்பங்களைத் தங்கள் தகுதியால் பொறுத்து தியாகங்கள் செய்து வென்று விட வேண்டும். அறம் அல்லாத இறத்தலாகிய தொழில் மேற்கொள்ளாதிருக்க வேண்டும்; இராமபிரான் மேற்கொண்ட தருமத்திற்கு உறுதுணையாகத் தாங்கள் நின்று வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று உணர்ச்சியோடு கூறுகின்றான் அனுமன்.

இக் கருத்தை உள்ளடக்கி,

'சின்னாள் நீ இடர் தீராதாய்
இன்னா வைகலின், எல்லோரும்
நன்னாள் காணுதல் நன்றுஅன்றோ!
உன்னால் நல்லறம் உண்டானால்'

-சுந்தரகாண்டம்
சூடாமணிப்படலம்

என்ற பாடலால் அனுமன் தெரிவிக்கின்றான்.

எந்த ஒரு நல்ல அறமும் வெற்றி பெற வேண்டுமானால் அஃது தியாகத்தோடு கலந்து தொழிற்படும்பொழுதுதான் முழு வெற்றியை அடைகின்றது என்ற தத்துவத்தை மிக அருமையாக சீதை - அனுமன் உரையாடல் மூலம் கம்பன் விளக்குகின்றான். இராமன் மேற்கொண்டுள்ள பேரறம் சீதையினுடைய தியாகத்தோடு கலந்து முழு வெற்றியை அடைந்தது என்பதை,

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

- திருக்குறள்
பொறையுடைமை
பா.எ.7

என்ற திருக்குறட் கருத்தோடு பொருத்திக் காட்டிய கம்பன் படைப்பு, காப்பிய உலகின் மணிவிளக்காய் ஒளிர்வதைக் காணலாம்.

பண்புக் கடல் பரதன்

உலகில் பிறந்த மனிதன், ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை எல்லா வகை உயிர்களிடத்தும் அன்பு பூண்டவனாக வாழ வேண்டும். மேலும் அவன் ஒழுக்க சீலனாகவும், உலக மரபை உறுதியாகக் காப்பவனாகவும் திகழ வேண்டும்; நீதியை, தருமத்தை முன் நின்று போற்றி வளர்ப்பவனாக இருக்க வேண்டும்; தன் மனைப் பாச உணர்வுக்கு உட்படுத்தாது, பிறர்க்கு இயன்ற உதவியைச் செய்யும் தியாக உணர்வைப் பெற்றவனாக இருக்க வேண்டும். இவ்வாறு அன்பு, அறநெறி, நீதி, கருணை இவையெலாம் இயைந்து வாழ்பவனைப் பண்புடையாளன் எனக் கூறுகின்றார் திருவள்ளுவர். இத்தகைய பண்புடையாளார்கள் இவ்வுலகில் வாழ்வதனால் தான் இவ்வுலகம் பாதுகாக்கப்படுகின்றது. இல்லையென்றால் இயங்கும் முறை தவறி அழிந்து மண்புகுந்து விடும் என்று உறுதியாகக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

'பண்புடையார்ப் பட்டுண்(டு)
உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்!'

-பண்புடைமை. 996.

என்பது திருக்குறளாகும். திருவள்ளுவர் கூறிய பண்புடைமைக்கு எடுத்துக்காட்டாக, தாம் பாடிய இராமகாதையில் நமக்கு, பரதனைச் சித்தரித்து காட்டுகின்றார் கம்பர் பெருமான்.

உண்மையில் பரதன் ஒழுக்கம் உடையவன், அறநெறியைக் காக்கும் அவா உடையவன்; நீதியை நிலைநாட்டத் துடிக்கும் நேர்மையாளன்; தருமத்தை உயிரென மதிப்பவன்; நாட்டு மக்கள் பால் நல்லன்பு பூண்டவன்; சிறப்பாக இராமன்பால் அன்பும் பக்தியும் கொண்டவன்; மேலும் இராமனைப் போன்றே குணத்தாலும் அழகாலும் ஒத்து நிற்பவன்; இத்தகைய பண்புகள் கொண்டவன் பரதன் என்று விசுவாமித்திரரே கூறுகின்றார். மன்னன் சனகனிடம் தசரத குமாரர்களைப் பற்றிக் கூறும் பொழுது, மேற்கண்டவாறு பரதனைப் பற்றி,

தள்ளரிய பெருநீதித் தனிஆறு புகமண்டும்
பள்ளமெனும் தகையானைப் பரதன்எனும்
பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர் கோன்
மகள்பயந்தாள்

-பாலகாண்டம்
குலமுறைகிளத்துப்படலம்

என்று மனதாரக் கூறுகின்றார்.

இத்தகைய புகழ் வாய்ந்த பரதன் வாழ்வில் சோதனை புகுகின்றது. பரதன் தன் தாய்பிறந்த கேகய நாட்டிற்குச் சென்று விட்டான். மந்தரையின் சூழ்ச்சியில் கைகேயி மயங்கிவிட்டாள். இராமன் முடிசூடாது, காடாளவும், பரதன் நாடாளவும், கைகேயி வரம் கேட்கிறாள், தயரதன் துக்கம்தாளாமல் இயற்கை எய்துகிறான். இந்தச் சூழ்நிலையில், பரதன் அயோத்திக்குத் திரும்புகிறான். எங்கு நோக்கினும் நாட்டில் துன்பச் சூழல் இருப்பதை உணருகின்றான். பின் நடந்த செய்திகளை அறிகின்றான்.

இந்த நிலையின் பரதனுடைய உள்ளத்தில் இருவேறு அறங்கள் மோதுகின்றன. ஒன்று தன்னைப் பெற்ற தாயின் செயல். மற்றொன்று, மூன்று உலகங்களும் போற்றப்பெறும் முதல்வனாகிய இராமன் முடிபுனையும் உலக மரபு! இவ்விரு அறங்களைப்பற்றிச் சிந்திக்கிறான் பரதன். தன்னைப் பெற்ற தாய் உயர்ந்தவள்தான்; ஆனால் அவள் அறநெறி அழிக்க முயல்கிறாள். அவளை எங்ஙனம் போற்றுவது! ஒருதாய் தன்னுடைய மகனுக்குச் செல்வம் சேர்க்க வேண்டுமென்று, யாரும் அறியாவண்ணம் பிறருடைய செல்வத்தைச் திருடிச்சேர்ப்பது போல, உலகமரபை அழித்து அரசைத் தனக்கு ஆக்குவதை எண்ணிச் சினக்கின்றான்; தாய் தனக்குச் செய்தது புகழ் அல்ல! அழியாப் பழியை அல்லவா தந்து நிற்கின்றாள் என்று வருந்துகின்றான். அவன் தாயை நோக்கிச் சொல்லுகிறான். யாரும் செய்யத் துணியாத பிழையைச் செய்து என் முன் நிற்கின்றாய். நீ செய்ததைக் கண்டும் நானும் நிற்கின்றேன். என்னை மீறி வரும் சினத்தால் உன்னைத் தாயென்று பாராது வீழ்த்திவிடுவேன்; ஆனால் தாய் போன்ற அந்த இராமன் வருந்துவானே

என்றே அஞ்சுகின்றேன். தந்தை உயிர் நீக்க, மூத்தவன் காடாள, நான் நாடாள, இத்தகைய அறநெறி நமக்குத் தேவையேயில்லை. வஞ்சனை படைத்த பாவி நீ! சூரிய குலத்தின் மரபை மாய்த்தாய்; தொன்று தொட்டு வந்த குல ஒழுக்கத்தைச் சிதைத்தாய்; நீயும் ஒரு பெண்ணா! பழிபடைத்த பரதன் என்ற வசைச்சொல்லைக் கூட்டுவித்தாய் என்றே ஆத்திரம் பொங்கப் பேசுகிறான்.

"நீ இனம் இருந்தனை யானும் நின்றெனன்
ஏஎனும் மாத்திரத்(து) எற்று கின்றிலென்
ஆயவன் முனியும் என்(று) அஞ்சி னேன்அலாற்
தாயெனும் பெயர் எனைத் தடுக்கற் பாலதோ!"

"மாளவும் உளன்ஒரு மன்னவன் வன்சொலால்,
மீளவும் உளன்ஒரு வீரன் மேயபார்
ஆளவும் உளன் ஒரு பரதன் ஆயினால்
கோள் இல(து) அறநெறி குறை உண் டாகுமே!"

"சுழிஉடைத் தாய்சொலும் கொடிய சூழ்ச்சியால்
வழிஉடைத் தாய்வரும் மரபை மாய்த்தொரு
பழி உடைத்(து) ஆக்கினன் பரதன் பண்டெனு
மொழி உடைத்(து) ஆக்கலின் முறைமை வேறு
உண்டோ?"

- அயோத்தியா காண்டம்
பள்ளிபடைப்படலம்

இவ்வாறு பரதன் தன் தாயைச் சினப்பதின்மூலம் பழிக்கு நாணுகின்ற பண்புள்ளத்தைப் பார்க்கின்றோம். பாசத்தைத் துறந்து, உலகமரபை, நீதியை, அறநெறியைக்

காக்கத் துடிக்கும் பரதனின் பண்புடைமையை நமக்கு இப்பாடல்களின் மூலம் கம்பர் காட்டுகின்றார்.

வருந்தும் பரதனிடம் வசிட்டர் இந்த நாடு இனி உன்னை நோக்கி இருக்கிறது. ஆகவே நீ நாட்டைத் தாங்குவாய் என்று சொல்லுகிறார். அதற்குப் பரதன், மூத்தவன் இருக்க நான் முடிபுனையேன். அது தருமமன்று, நான் உடனே கானகம் சென்று அழைத்து வந்து தொன்றுதொட்டு வந்த நெறிமுறைப்படி முடி சூட்டுவேன் என்று சொல்லி பரதன் தவவேடம் பூண்டு குடும்பத்தாரோடு கங்கைக்கரையை அடைந்தான். அங்கு, கங்கையிரு கரையுடைய குகனைச் சந்திக்கிறான். அவனிடம் பரதன் நீதியைக் காத்தற்பொருட்டு, மன்னனாகிய இராமனை அழைத்துச் செல்ல வந்துள்ளேன் என்று சொல்கிறான். உடனே பொய்யில் உள்ளத்தவனாகிய குகன் தன்னை மறந்து, ஆனந்தம் மேலிட்டு, பரதனை உளமாரப் பாராட்டுகின்றான். தாய் சொல்லைத் தட்டமுடியாமல், தந்தை தந்த இந்த உலகை - தீயவை என்று ஒதுக்கிவிட்டாய்; தவவேடம் பூண்டாய்; மேலும் தந்தை தந்த நாட்டை மூத்தவருக்கு அளிக்க ஈண்டு வந்திருக்கிறாய். உண்மையில் யாராலும் ஆற்றமுடியாத இச்செயலை ஆய்ந்து பார்த்தால் ஒரு இராமர் அல்ல ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் உனக்கு ஒப்பாகமாட்டார் என்று வியந்து,

தாயுரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னை
தீவினை என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்

போயினை என்ற போழ்து
புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ! தெரியின் அம்மா

-அயோத்தியா காண்டம்
குகப்படலம்

எனக் குகன் பாராட்டுகின்றான். இராம பிரானிடத்துப் பேரன்பு கொண்ட குகன், ஆயிரமடங்கு சிறப்புடையவன் பரதன் என்று அழுத்தமாகச் சொல்வதற்கு, ஆயிரம் இராமர் ஆவரோ என்ற தொடரால் சுட்டிக் காட்டும் அழகே அழகு! இங்கு நீதியை, முன்னோர் மரபின் அறநெறியைக் காக்க முற்படும் பரதன் செயலைக் காட்டுகின்றார் கம்பர்.

அடுத்து பதினான்கு ஆண்டுகள் கழிந்தன. இராமன் வருகைபுரிய வில்லையே என்று ஏங்கி, தீவளர்த்து, அதில் வீழப் புறப்பட்டான் பரதன்; இதனை அறிந்த கோசலை, பரதனைத் தடுத்து, கையைபற்றிக்கொண்டு சொல்லுகிறாள். மூத்தவன் இருக்க முறைமையால் நிலம் காத்தவர் உண்டா என்று கேட்டு, விரதம் பூண்டு மூத்தவன் வரும் வரை இந்த நாட்டைக் காத்தாய்; நாட்டை மட்டுமல்ல தருமத்தைக் காத்தாய்; நீதியைக் காத்தாய்; தருமத்தின் உருவமாகவே உன்னை நாங்கள் காணுகின்றோம். ஐய! பெருமையிற் சிறந்ததான உனது பேரறச் செயல் எண்ணிப் கோடி இராமர் ஒன்று சேர்ந்தாலும், அவர்களின் அன்பு, தியாகம், உனது அன்புத் தியாகத்திற்கு ஒப்பாகுமோ! புண்ணியத்தின் வடிவம் நீ, ‘பண்பின் கடல் நீ! நீ அழிந்தால் இந்த உலகமும், உயிர்களும் அழிந்து

மண்ணில் புகுந்துவிடும் என்று அன்புள்ளத்தோடு கூறுகிறாள் கோசலை -

“தரும நீதியின் தன்பயன், ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐயநின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ!”

“எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக்(கு) அருகு ஆவரோ!
புண்ணி யம்எனும் நின் உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ!“

-யுத்த காண்டம்
மீட்சிப்படலம்

இப்பாடல்களின் மூலம், தருமம், நீதி, அன்பு, தியாகம் இவையெலாம் இணைந்த பண்புடை-யாளர்கள் இவ்வுலகில் வாழ்வதனால் இவ்வுலகம் பாதுகாக்கப்படுகின்றது என்றும், இல்லையென்றால் மண்புகும் என்றும் சொன்ன திருவள்ளுவர்தம் கருத்தை, பரதன் பண்புக்கடல்; தரும நீதியின் பயன் என்று சொல்லி கோசலையின் வாயிலாகப் பொருத்திக் காட்டும் கம்பர்தம் மொழிகள் கோபுரத்தில் ஏற்றிய அருட்சுடர் மொழிகளாகும்.

மேலும் கம்பர் பெருமான், காப்பியத்தில் பல இடங்களில் பரதனை,

பெருந்தகை என்றும்,
தருமமே ஆனான் என்றும்

உயர்குணத்து உரவுத் தோளன் என்றும்
உயிரினும் ஒழுக்கம் நன்று எனப்
பொன்றிய புரவலன் என்றும்
நியாயம் அத்துணைக்கும் ஓர் நிலையம் என்றும்
சேண் உயர் தருமத்தின் தேவை என்றும்
செம்மையின் ஆணி என்றும்
பரிவு அமைந்த திருமனத்தன் என்றும்

பெரும் புகழ் பரதனைப் பண்புக் கடலாகக் காட்டுகின்றார் கவியரசர் கம்பர்.

அணி இலக்கண அழகு

வாழ்க்கையில் நாம் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றோம். பல்வேறு இயற்கைப் பொருள்களைப் பார்க்கின்றோம். விலங்குகள் செய்யும் விந்தைகளைப் பார்க்கின்றோம். உணர்வு மிகுதியான மனிதர்களைச் சந்திக்கின்றோம். நாம் இவற்றில் ஈடுபடும்பொழுது அந்த இயற்கைப் பொருள்களின் தன்மைகளையும், உணர்வு மிகுந்த மனிதர்களின் செயல்களையும் மட்டும் அனுபவிக்கிறோம்; ஆனால் கவிஞன் கற்பனை சக்தி மூலம், தான் எண்ணிய கருத்துக்களைக் காணுகின்ற இயற்கைப் பொருள்களோடு இணைத்து ஒரு புதுமையைத் தோற்றுவித்து விடுகின்றான்; அறிவுக்கு விருந்தாக்கிவிடுகின்றான்; நிலையான இன்ப உணர்வைத் தன் கவிதையில் இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியோடு, தன் கருத்தை இணைத்துக் காட்டுவதை, இலக்கணத்தில் 'தற்குறிப்பேற்ற அணி' என இலக்கண நூல் கூறும்.

இத்தகைய இன்ப வித்தை ஒன்றை முத்தொள்ளாயிர ஆசிரியர், தாம் பாடிய முத்தொள்ளாயிரத்தில் காட்டக் காண்போம்.

சோழப் பேரரசுக்கு உட்பட்ட குறுநில மன்னன் ஆளும் ஊருக்குக் கவிஞர் வந்து சேர்ந்தார். அவரை மன்னன் வரவேற்று, அவரோடு உரையாடினான்; சோழ மன்னன் பிறந்தநாள் விழாவைப் பற்றிக் கவிஞரிடம் கேட்ட பின், அவனை நோக்கிக் கவிஞர் கூறுகின்றார். மன்னா! நம்முடைய மாமன்னன் இரேவதி என்ற விண்மீனில் பிறந்தவன்; ஒளி செறிந்த இலைவடிவ வேலை உடையவன். மன்னன் பிறந்தநாளன்று ஊரே களிப்புற்று ஆடல் பாடல்கள் நிறைந்திருந்தது. ஊரெல்லாம் சுத்தப்படுத்தப்பட்டன; அரண்மனைப் பகுதிகள் அழகுபடுத்தப்பட்டன; குடிமக்கள் வீடெல்லாம் ஒழுங்குப்படுத்தப்பட்டது; ஒவ்வொரு வீடும் ஒட்டடை அடித்து, சுத்தப்படுத்தப்பட்டது. கொலு மண்டபத்தில் அமர்ந்து, மாமன்னன் பல பரிசுப் பொருள்களை வழங்கினான். வேதம் ஓதும் அந்தணர்கள் பசுவும் பொருளும் பெற்றுச் சென்றனர். மன்னனை வாழ்த்திய புலவர் பெருமக்களும், அமைச்சர் பெருமக்களும், பெரிய யானைகளைப் பரிசாகப் பெற்று மன நிறைவோடு சென்றனர். ஆனால் ஒரு வேடிக்கை! இவர்களெல்லாம் பரிசுகளைப் பெற்றனர்; வீடு சுத்தம் செய்ததனால் சிலம்பிகள் தங்களுடைய ஒரே சொத்தாகிய தங்கள் வீடுகளை இழந்து நின்றதைப் பார்க்க வேண்டுமே! என்று பாடினார் கவிஞர்

அந்தணர் ஆவொடு
பொன் பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட
களிறு ஊர்ந்தார் - எந்தை

இலங்கிலைவேற் கிள்ளி
இரேவதி நாள் என்னே
சிலம்பிதன் கூடிழந்த வாறு

-முத்தொள்ளாயிரம் பா.46.

என்பது பாடல்.

பொதுவாக விழாக் கொண்டாடும் பொழுது வீட்டைச் சுத்தம் செய்வது வழக்கம். அதுகாலை சிலம்பி கூட்டோடு களையப்படுவதும் இயற்கை! விழாவில் பரிசளிப்பது இயற்கை! இந்த இயற்கை நிகழ்ச்சியோடு, பலர் பரிசிலைப் பெற்றதாகவும், சிலம்பி இழந்ததாகவும் கூறுவதின் மூலம் தீயவைகளையப்பட்டு, நன்மைக்குக் கால் கோள் விழா நடத்தப்படுகின்றது என்ற கருத்தை இணத்துக்காட்டி வாழ்த்தும் கவிஞன் சுவைமிகுந்த அறிவு விருந்து ஒன்றை நமக்குப் படைக்கக் காணலாம். இவ்வாறு தற்குறிப்பேற்ற அணி யாக இப்பாடல் விளங்குகின்றது.

இதுபோல், கம்பர் பெருமானும், தாம் பாடிய இராமகாதையில் தற்குறிப்பேற்ற அணி அமைந்த நயமிகு பாடல் ஒன்றை நமக்கு அளிக்கின்றார்.

கார்காலம் தொடங்கிவிட்டது. இராமன் சீதையைப் பிரிந்திருந்த காலம். இக்காலந்தான் சுக்ரீவனுக்கத் தவணை கொடுத்திருந்த காலம். மழை காலக் குளிர்ச்சி, அடிக்கடி சீதையை நினைப்பூட்டி இராமபிரானை வருத்துகின்றது. பக்கத்துச் சோலையில் அமர்ந்த இராமபிரான் அருகே இரண்டு மான்கள் வந்து விளையாடின; மகிழ்ச்சியோடு துள்ளித் துள்ளி விளையாடின; அதன் மேனி அழகையும், கண்களின்

அழகையும் பார்த்த இராமபிரானுக்கு உடனே சீதையின் கண்கள் நினைவுக்கு வந்தன. இந்த நிகழ்ச்சிதான் நடந்தது.

இந்த இயற்கை நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு, கம்பர் அமுதத்தை ஒத்த கவிதையை நமக்குப் படைத்துத் தருகின்றார்.

சமுதாயத்தில் பல்வேறு குணங்கள் கொண்டவர்கள் உண்டு; அதிலும் பொறாமைக் குணம் கொண்டவர்கள் சமுதாயத்தையே அழிக்கவரும் நச்சுக்காற்று போன்றவர்கள்; அவர்கள் தாங்களும் நன்றாக வாழ மாட்டார்கள். பிறர் நன்றாக வாழ்தலையும் பொறுக்க மாட்டார்கள். இத்தகைய 'பொறாமை' உணர்வினை, இயற்கையில் மகிழ்வோடு துள்ளி விளையாடும் மான்களின் மேல் ஏற்றி இணைத்துக் காட்டுகின்றார் கம்பர். மான்களின் மகிழ்ச்சிக்குக் காரணம் கூறுகிறார். மான்களின் கண்ணழகை மக்கள் எல்லோரும் போற்றினார்களாம், ஆனால் சீதை பிறந்தபிறகு அவள் கண்ணழகை எல்லோரும் போற்றத் தொடங்கிவிட்டார்களாம்; புலவர்களெல்லாம் சீதையின் கண்ணழகிற்கு ஒப்பில்லை என்று பாடினார்களாம். மான்களின் கண்களைச் சொல்வார்களில்லையாம். இதனால் பொறாமை கொண்டிருந்ததாம் மான்கள். இந்த நிலையில், மாரீசன் என்ற அரக்கன் மான்களின் உருவத்தில் வந்து, இராமஇலக்குவனர்களைப் பிரித்து, சீதைக்கு அரிய துன்பத்தைக் கொடுத்து விட்டான். அது போதும். கண்அழகுக்கு மான் என்ற பெயரைக் தட்டிச் சென்ற சீதைக்கு இத்துன்பம் வேண்டும்தான் என்று மான்கள் மகிழ்ந்ததாம்; ஆனால் அந்த மகிழ்ச்சியில்

குரல் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்யவில்லையாம். ஏனென்றால் இராமன் நம்பெயரிலும் அம்பு எய்து விடுவானோ என்ற அச்சத்தால், மௌனமாகத் துள்ளித் துள்ளி விளையாடினவாம். இதனை,

நோக்கி னால் நமை நோக்கழி
செய்தநுண் மருங்குல்
தாக்(கு)அ ணங்கெனும் சீதைக்குத்
தாக்கரும் துன்பம்
ஆக்கி னான் நம(து) உருவில் என்று
அரும்பெறல் உவகை
வாக்கி னால் உரை யாம் எனக்
களித்தன மான்கள்

-கிட்கிந்தாகாண்டம்
கார்காலப்படலம்.

என்று கூறுகின்றார்.

இப்பாடலில் கார்காலத்தில் இயற்கையில் களித்த மான்களின் மேல், கற்பனை மூலம் பொறாமை உணர்வைப் புகுத்தி இணைத்து புதுமை விருந்து படைக்கின்றார் கம்பர். மேலும், பொறாமை உணர்வை விலக்க வேண்டும் எனச் சுட்டுகின்றார். இவர் தம் பாடலால், தற்குறிப்பேற்ற அணியின் அழகும் ஓர் அழகுபெற்றது எனலாம்!

வாழ்க கம்பன் தமிழ்!

கம்பன் காட்டும் நதிகள்

கவிஞன், உலகத்தில் தோன்றிய பொருள்களின் தன்மைகளை உணருகின்றான். அதன் நலன்களைக் காண்கின்றான்; மேலும் அதன் பயன்களையும் துய்க்கின்றான். இவ்வாறுதான் கண்டு, துய்த்தவற்றைப் பிறர் பால் உணர்த்துவதற்கு, பாடல்களில் உவமையைக் கையாள்கிறான். உவமை, கவிஞனுக்குக் கைவிளக்காகி, இருளை அகற்றி, உண்மைப் பொருளைப் பிறருக்கு விளக்குவதற்கு உதவுகின்றது; மேலும் கவிஞன் பாடும் பாடல்களுக்கு அழகையும், வடிவமைப்பையும், பொருள் தெளிவையும் நல்குகின்றது என்றும் கூறலாம்.

கவிஞன் உவமையாகக் கூறும் பொருள் உயர்ந்த பொருளாக இருக்க வேண்டும். அவன் தான் சொல்லும் உயர்ந்த பொருளுக்குத் தாழ்ந்த ஒரு பொருளை உவமையாகக் கூறலாமா! தாழ்ந்ததைக் கூறினால், கவிதையின் நலனும் கெட்டு, எந்தக் குறிக்கோளைச்

சொல்லவந்தானோ கவிஞன் அந்தக் குறிக்கோளும் நிறைவேறாத் தன்மையையும் உண்டாக்கும். ஆகவே உயர்ந்த பொருளுக்கு உயர்ந்த ஒரு பொருளையே உவமையாகக் காட்ட வேண்டும். இதனைத் தொல்காப்பியர், உவமை இயலில்-

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"

என இலக்கணம் வகுத்துள்ளார்.

இவ்வாறு, முன்னோர் வகுத்த கவிதை மரபு வழி நின்று கம்பர் பெருமான், தாம் பாடிய இராம காதையில் நதிகள் நாட்டிற்கு அளிக்கும் நற்பயன்களுக்குக் கூறும் உவமைகள் நவில்தோறும் நவில் தொறும் நயம் பயப்பதாகும். எண்ணச் சுவைதரும் தேனடையாகும்.

சரயு நதி

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' - என்பது பழமொழியாகும். ஒரு நாட்டிற்கு ஆறு எவ்வளவு இன்றியமையாதது என்பதை மேற்கண்ட பழமொழி நமக்குத் தெரிவிக்கின்றது. அதுபோல கோசல நாட்டை, சரயுநதி பலவகையாலும் வளம்படுத்துகின்றது என்று கூறுகின்றார் கம்பர். கம்பர் சரயுநதிக்கு, தாய்முலைப்பாலை உவமைகூறி அதனைப் போற்றுகின்றார். சூரிய குலத்து வேந்தர்கள் தூய்மையும் ஒழுக்கமும் கொண்டவர்கள். சரயுநதியும் சீரான ஓட்டத்தோடும் ஒழுங்கோடும் ஓடிக்கொண்டே-யிருக்கிறதாம். சரயுநதி நீர்ப் பாசனத்திற்கு உதவுகிறது. உணவுகளைக் தோற்றுவிக்கின்றது. எவ்வாறு, தாயின் முலையானது, குழந்தைகளுக்கு ஊட்டசத்து நிறைந்த பாலைத் தந்து, வளர்க்கின்றதோ, அவ்வாறே நதியானது

நாட்டுமக்களுக்கு, சத்துப் பொருள் நிறைந்த உணவுகளைத் தோற்றுவிக்க உதவி, மக்களை வளர்க்கின்றது; மேலும் தாய்ப்பாலின் மூலம், உன்னத உயர்ந்த எண்ணங்களும், குழந்தைகளுக்கு ஊட்டப்படுகின்றன. அதுபோல, நதியானது, நாட்டுமக்களின் நீராடுவார்களின் உடல் அழுக்கை மட்டும் அகற்றாது, உள்ளத்து அழுக்கையும் போக்கி இறையுணர்வை நல்கும் புனித நீராகவும் ஆகின்றது என்றும் கூறுகின்றார்.

இரவி தன்குலத்(து) எண்ணில்பல் வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்ன(து)இவ்
உரவு நீர்நிலத்(து) ஓங்கும் உயிர்க்கெலாம்

-பாலகாண்டம்
ஆற்றுப்படலம்

என்று சரயுநதிக்குத் தாய் முலைப்பாலை உவமை காட்டும் அழகே அழகாகும்.

அடுத்து வேறோர் உவமையைக் காண்போம்.

சரயுநதி இமயமலையில் பிறக்கின்றது; பின் அது ஓடிக் கடலை அடைந்து அதனோடு கலக்கின்றது. அவ்வாறு ஓடிவரும் நதி இடையில் இருக்கும் ஏரிக்கு நீரை உதவுகின்றது. அந்த இடத்தில் ஏரி என்ற பெயரைப் பெறுகின்றது. மற்றும் பல இடங்களில், அமைந்திருக்கும் தடாகங்களுக்கும் நீரை வழங்குகின்றது. தடாகம் என்ற பெயரையும் பெற்றுக் கொள்கின்றது. போகும் வழியில் கண்மாய்கள் குறுக்கிட்டால் கண்மாய்களில் நீரைக் தேக்குகின்றது. அங்கு கண்மாய் எனப் பெயர் வாங்கி நிலங்களை

வளர்க்கின்றது. இவ்வாறு பல பெயர்களைப் பெற்றுப் பயனளிக்கும் சரயுநதிக்குப் பரம்பொருளை உவமை காட்டுகின்றார் கம்பர்.

இவ்வுலகிற்குப் பரம்பொருள் ஒன்றுதான் உலகிற்குத் தேவன் ஒருவன்தான், பலதெய்வங்கள் இல்லை; ஆனால் தெய்வ வடிவங்களைத் ஆராதிப்பதற்கு எளிதாக அமைத்துத் தந்தனர் முன்னோர்கள். சைவர்கள், அந்தப் பரம்பொருளைச் 'சிவன்' என்ற பெயரால் அழைத்து வழிபடுகின்றனர். வைணவர்கள் 'திருமால்' என்று கூறிப் போற்றுகின்றனர். முகம்மதியப் பெருமக்கள் 'அல்லா' எனப் பெயரிட்டுத் தொழுகின்றனர். இவ்வாறு ஒரே பரம்பொருளை, பலப்பல சமயங்கள் பலப்பல பெயரிட்டு வணங்கிவருவது போல, சரயுநதியானது, தான் செல்லும் துறைதோறும், ஏரி, தடாகம், கண்மாய் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு நாட்டிற்கு நன்மை பயக்குகின்றது என்று உயர்ந்த உவமை கூறி இன்பம் பெற வைக்கின்றார் கம்பர்.

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்பரும் பொருள் ஈ(து) என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி,
துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும் போல் பரந்த(து) அன்றே!

- பாலகாண்டம்
ஆற்றுப்படலம்

என்பது பாடல்.

அடுத்து, மற்றோர் உவமையைக் காண்போம்.

சரயுநதி இடைவிடாமல் ஓடிவருகின்றது, இடையில் சோலை சூழ்ந்த நல்ல பொய்கைகள் இருக்கின்றன. அப்பொய்கைக்குள் சென்று, அங்கு மணத்தை நுகர்ந்து அதனைத் தாண்டிச் செல்கின்றது. அதுபோல் தடாகங்களுக்கும் சென்று மீள்கின்றது. பலப்பல தோட்டங்கள், வயல்கள் இவைகள் வழியாகவும் செல்கின்றது. இவ்வாறு புகுந்து செல்லும் பாங்கிற்கு இறைவனால் படைக்கப்பட்ட உடலுக்குள் உயிர்கள் வந்து தங்கிப் பின் ஏகும் பாங்கினை உவமை காட்டுகின்றார் கம்பர். உயிருக்கு, ஏழை, செல்வர் என்ற பாகுபாடில்லை; உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடில்லை; மேலும் அறிவுடையோர், கல்வியற்றவர் என்ற பாகுபாடும் இல்லை. இவ்வாறு உயிர் பாகுபாடின்றி உடலுக்குள் புகுந்து உடலைச் செழிக்க செய்வதுபோல், நதியானது, தடாகம், தோட்டம், பொய்கை, வயல், என்ற பாகுபாடின்றிச் செழிக்கச் செய்கின்றது என உடலுறை உயிரை உவமை கூறும் கம்பர் தம் ஒப்பற்ற தன்மை போற்றுதற்குரியதொன்றாகும்.

தாதுகு சோலை தோறும்
சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலி பூக
வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும்
உயிரென உலாய தன்றே!

-பாலகாண்டம்
ஆற்றுப்படலம்

கோதாவரி

இராம இலக்குமணரும், சீதையும், மூவரும் கோதாவரி நதியை வந்தடைகின்றனர். கோதாவரிநதி கடல்போல் பரந்து காட்சி அளிக்கின்றது. அந்த நதியால் நாட்டிற்கே பெருமையாக இருக்கின்றது. அது மலையில் விளையும் பொருள்களை வாரிக்கொண்டு வந்து, கீழே மருத நிலத்தவர்களுக்கு வழங்குகின்றது. அதனால் பொருள் வளமை சேர்க்கின்றது. மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய நிலங்களில் ஓடி, அந்த நிலங்களையும் செழிக்கச் செய்கின்றது. தன்னை நாடிவருவார்க்கு, கடவுள் உணர்வை ஊட்டி நல்லொழுக்கத்தை வளர்க்கின்றது. இவ்வாறு தெளிந்த நீராய் ஓடித் தழுவும் நதிக்கு, சான்றோர் தம் கவிதையை உவமை கூறுகின்றார் கம்பர்.

சான்றோர்தம் கவிதையானது, பல்வேறு பட்ட அழகுமிக்க அணிகளை உடையது. ஆகவே இக்கவிதைகள் நாட்டிற்குப் பெருமை தருகின்றன. மெய்ப்பொருளை உணர்த்துகின்றன; வாழ்வைத் திருத்தி வளம் பல சேர்க்கின்றன; ஆழமான பொருள்களைக் கொண்டனவாய், அறம் வளர்த்து நிற்கின்றன;

புவியினுக்(கு) அணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்(று)
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்

கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்

-ஆரணிய காண்டம்,
சூர்ப்பணகை படலம்

இவ்வாறு நதிக்குக் கவிதையை உவமை காட்டி அழகுறப் பாடும் திறன் கவியரசர் கம்பருக்கே உரியதாகும்.

கம்பன் தந்த கமலங்கள்

கவிச்செம்மல் ரெ.மு.

SLP